பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 02 திங்கட்கிழமை 14.02.2022 கதிர் 101

## இது ரகசியம் அல்ல!

எதிர்வரும் மார்ச் மாதம், தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பு – 'பிம்ஸ்டெக்' – தனது ஐந்தாவது மாநாட்டை கொழும்பில் நடத்துகின்றது. அதில் பங்கு பற்றுவதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கொழும்பு வருகின்றார். ☞2

# தொடரும் சிறைப்பிடிப்பால் கொந்தளிக்கின்றது தமிழகம்; இரணைதீவில் கைதான 12 மீனவர்களும் விளக்கமறியலில்

(ந.லோகதயாளன்)

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படும் விவகாரம் தமிழகத்தில் மேலும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த இந்திய மீனவர்கள் 12 பேர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து புறப்பட்ட படகுகளில் பயணித்த குறித்த மீனவர்கள் கிளிநொச்சி – இரணைதீவு கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

பயணித்த 2 ட்ரோலர் படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 12 பேரும் படகுகளுடன் நாச்சிக்குடா கடற்படை முகாமுக்குக் கொண்டுவரப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் நேற்று மாலை கிளிநொச்சி நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# நாட்டின் நிலைமை படுமோசம்; ஆட்சி மாற்றமே உடன் தேவை!

## சந்திரிகா அம்மையார் வலியுறுத்து



கொழும்பு, பெப்ரவரி. 14

இலங்கையின் இன்றைய நிலைமை மிகவும் மோசமான கட்டத்தில் உள்ளது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

மக்கள் அனைவரும் பொறுமை இழந்துள்ளனர் எனவும், நாட்டில் அடுத்து என்ன நடக்கும் என்று தன்னால் கூற முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். ☞2

## புதையல் தோண்டிய மூவர் சிக்கினார்கள்

புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட மூவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கண்டி, கல்னேவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அவுக்கன பிரதேசத்தில் குறித்த மூவரும் கைது ☞2

## யானை தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகிக் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்தார்.

பொலனறுவை, அரலங்கவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பஹல எல்லேவெள பிரதேசத்தில் இந்தச் ☞2

# மற்றொரு காட்டமான பிரேரணைக்கு ஜெனிவாவில் பிரிட்டன் தயாராகிறது

### சமாளிக்கும் முயற்சியாக அமைச்சர் பீரிஸ் மேற்குலக நாடுகளுக்குச் செல்லத் திட்டம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸிலின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக மற்றுமொரு கடுமையான பிரேரணையைக் கொண்டு வருவதற்கு பிரித்தானியா தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் பிரேரணையை இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்றவை எனக் கூறப்படுகின்ற பாரதூரமான மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளுக்கான பொறுப்புக்கூறலின் தாமத நிலை மற்றும் அண்மைய கால உரிமைகள் மீறல்கள் பற்றிய விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கும் என கொழும்பு இராஜதந்திர மட்டத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

பிரித்தானியா கொண்டு வரவுள்ள இந்தப் புதிய பிரேரணைக்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பலவும் மேற்குலக நாடுகள் சிலவும் ஆதரவைத் தெரிவித்துள்ளன எனவும் அந்தத் தகவல்கள் ☞10

## 265 போதை மாத்திரைகளுடன் மல்லாகத்தில் இளைஞர் கைது

யாழ்., தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லாகம் பகுதியில் போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மல்லாகம் – கோணப்புலம் பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவப் ☞2

## யாழில் கஞ்சாவுடன் ஒருவர் மாட்டினார்!

யாழ்., ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லைப்பிட்டியில் கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கஞ்சாவை விற்பனை செய்ய முற்பட்ட ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

42 வயதுடைய ☞2

## இன்று தொடக்கம் அதிகரிக்கப்பட்ட சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கல்



28 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்ட சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கல், இன்று முதல் ஆரம்பிக்கப்படுகின்றது என விடயத்துடன் தொடர்புடைய இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று ☞2

## இருவருக்கிடையில் முறுகல்; ஒருவர் வெட்டிப் படுகொலை

இருவருக்கிடையில் ஏற்பட்ட முறுகலில் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி, குருவிட்ட, பொரலுவ பிரதேசத்திலுள்ள வீடொன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொரலு, ஏரத்ன பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயது நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் தெரணியகல ☞2

# 6 மணிநேர தொடர் மின் துண்டிப்பு ஏப்ரல் மாதம் அமுலாகும் வாய்ப்பு

நாட்டில் 6 மணிநேர தொடர் மின் துண்டிப்பை மேற்கொள்ளவதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை இது தொடர்பான அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமையில், தொடர் மழைவீழ்ச்சி கிடைக்காவிட்டால் ஏப்ரல் மாதமாகும்போது நீர் மின் உற்பத்திக்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்படும் என்று மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 6 மணிநேர தொடர் மின் துண்டிப்பை மேற்கொள்ளவதற்காக எச்சரிக்கை காணப்படுகின்றது என மின்சார சபையின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அச்சமயம், அவர் யாழ்ப்பாணத்துக்கும் வந்து, இந்திய உதவித் திட்டத்தில் யாழ். நகரில் அமைக்கப்பட்டிருக்கும் கலாசார மண்டபத்தையும் திறந்து வைத்துக் கையளிப்பார் என்று சில ஊடகங்கள் ஊகத் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

ஆனால், இந்தியப் பிரதமர் யாழ். வருகை தந்து, அந்தக் கலாசார மண்டபத்தைத் திறந்து வைப்பதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

யாழ். காலாசார நிலையத்தை இலங்கைப் பணத்தில் சுமார் இருநூற்றியைம்பது கோடி ரூபா செலவில் இந்தியா நிர்மாணித்துள்ளது. கட்டட நிர்மாண வேலைகள் பூர்த்தியாகி வருடம் தாண்டி விட்டது. இன்னும் கையளிப்பு நடக்கவில்லை. அங்குதான் சிக்கல்.

ராஜபக்ஷக்களின் முன்னைய ஆட்சியில் இந்த உதவித் திட்டத்துக்குக் கால்கோள் இடப்பட்டது. அப்போது யாழ். மாநகர சபை திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் ஈ.பி.டி.பியின் கட்டுப்பாட்டில் இருந்தது. நகர முதல்வராக அவர் இருந்த போதே இந்தத் திட்டம் கருக்கட்டியது.

இப்போது, யாழ்.மாநகர சபை நிர்வாகம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் போய், அங்கிருந்து சைக்கிள் கட்சியின் அதிருப்திக் குழுவான மணிவண்ணன் அணியின் கைகளுக்கு மாறிவிட்டது.

இந்தச் சமயத்தில் இந்தப் பெரிய கட்டமைப்பு யாழ்.மாநகர சபையிடம் கையளிக்கப்படாமல் மத்திய அரசின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் எனக் கொழும்பு அதிகாரத் தரப்பு கங்கணம் கட்டி நிற்கின்றது.

இந்தக் கட்டமைப்பை நிர்வகிக்கும் இயலுமை யாழ்.மாநகர சபையிடம் இல்லை என்று தெரிவித்து, அதைத் தட்டிப் பறிப்பதற்கு தென்னிலங்கை அதிகார மட்டத்தில் பல்வேறு தரப்புகளும் போட்டி போட்டுக் கொண்டு நிற்கின்றன.

கொழும்பில் தாமரைத் தடாக கலாசார மையம் படைத் தரப்பின் கட்டுப்பாட்டில் இயங்குவது போல - யாழ்.மாநகர சபையின் நிலத்தில், யாழ்.மாநகர சபைக்கு எனக் கட்டப்பட்ட இந்தக் கலாசார மண்டபத்தை - இராணுவ நிர்வாகத்திடம் கையளிக்க வேண்டும் என்ற அழுத்தமும் ஒரு பக்கத்தில் வந்து கொண்டிருக்கின்றது.

தம்மை ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதி என்று கூறிக் கொண்டு இங்கு அதிகாரம் பண்ணும் வடக்கு மாகாண ஆளுநர் கூட, இன்னும் இந்தியாவினால் நாட்டிடம் கையளிக்கப்படாத இந்தக் கட்டடத்துக்குள் இப்போதே ஒரு பாதுகாப்புப் படைப் பிரிவை நிறுத்த வேண்டும் என்று துடியாய்த் துடிக்கின்றார் எனக் கூறப்படுகின்றது.

ஆனால், இந்தக் கட்டமைப்பு யாழ். மாநகர சபைக்கு என்ற வேண்டுகோளில், யாழ்.மாநகர சபையின் நிலத்தில், அதற்கான ஒப்பந்தங்களுடன் கட்டி முடிக்கப்பட்டமையால், யாழ்.மாநகர சபையிடமே அது கையளிக்கப்பட வேண்டும் என்பதிலும் -

யாழ்.மாநகர சபையே அதை நிர்வகிக்கும் என்ற ஏற்பாடு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதிலும் -

இந்தியத் தரப்பு மிக மிகக் கறாராக இருப்பதாகத் தெரிகின்றது.

அந்த நிலைமையை உறுதிப்படுத்தினால், கட்டடத்தை நிர்மாணித்த இந்தியத் தரப்பினால் அது உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படும் என்பதில் இந்தியா மிக உறுதியாக இருப்பதாகத் தெரிகின்றது.

இந்தக் கலாசார மண்டபத்தை யாழ். மாநகர சபை பொறுப்பேற்று, நிர்வகிப்பதற்கு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இந்தியா முழு ஒத்துழைப்பு மற்றும் நிதி உதவிகளையும் நேரடியாக வழங்கி, வழிகாட்டும் என்ற அளவுக்குக் கூட இது விடயத்தில் பங்களிப்பதற்கு இந்தியா தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது.

அப்படி இருந்தும் கலாசார மண்டபத்தை யாழ்.மாநகர சபையிடம் கையளிக்காமல் பிடுங்கிக் கொள்வதில் கொழும்பு தீவிரமாக இருப்பதால், கையளிப்புத் தொடர்பான ஏற்பாடு ஒன்று இறுதி செய்யப்படாமல் இழுபறிப்படுகின்றது.

மார்ச் நடுப்பகுதியில் இந்திய பிரதமர் இலங்கை வருவாரானாலும் -

யாழ்.மாநகர சபையிடம் மண்டபத்தைக் கையளித்து, அதனை மாநகர சபையே தொடர்ந்து நிர்வகிக்கும் நடைமுறைச் சாத்தியமான திட்டம் ஒன்றுக்கான இணக்கம் - அதற்கு முன்னர் ஏற்படக் கூடிய சாத்தியமில்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இந்திய ஆதரவுடன் இந்தக் கலாசார மண்டபத்தைப் பொறுப்பேற்றுக் கையாளும் விச்சுழி தமக்கு இருப்பதாக யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் வெளிப்படுத்தி நிற்கவில்லை என்ற ஆதங்கமும் இந்தியத் தரப்புக்கு இருப்பதாகவும் தெரிகின்றது.

ஒட்டு மொத்தத்தில் யாழ்.மக்களுக்கு - யாழ்.மாநகர சபைக்கு - வடக்கின் உணர்வு பூர்வ மையமாகக் கம்பீரமாக வானளாவ எழுந்து நிற்கும் இந்தக் கலாசார நிலையம் - கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத கனவாக விலத்தியே நிற்கின்றது.

தனது முழு உதவித் திட்டத்தின் கீழ் திறக்கப்பட்ட பலாலி சர்வதேச விமான நிலையத்தை மீள இயங்க வைக்க இந்திய இராஜதந்திரத்தினால் முடியவில்லை. பலாலி சர்வதேச விமான நிலையத்தின அடுத்த கட்ட மேம்பாடு, காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி என வடக்கில் பல திட்டங்களுக்கு இந்தியா நிதி ஒதுக்கி வழங்கியும், அவை எவையுமே முன்நகரவேயில்லை.

ஏதோ அரூபக்கரங்கள் ராஜபக்ஷ ஆட்சிக்கட்டில் இருந்து இவற்றுக்குத் தடை போட்டுக் கொண்டிருக்கின்றன என்பது நிச்சயம்.

அந்த அரூபக்கரங்களை இயக்கும் மூளை மையம் பெய்ஜிங்கை மூல மையமாகக் கொண்டதா என்பதுதான் கேள்வி.

பொருளாதார நெருக்கடியில் முகக்குப்புற விழவிருந்த இலங்கையை உரிய சமயத்தில் கைகொடுத்து காப்பாற்றிப் பேருதவி பண்ணும் புதுடில்லியால் வடக்கில் இந்தப் பணிகளை - நேர்மையான, நீதியான, நியாயமான உதவித் திட்டங்களைக் கூட - முன்னெடுக்க முடியாமல் இருப்பது பரிதாபத்துக்குரிய நிலைமை தான்.

- மின்னல் -

## யானை தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எல்லேவெள பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயது நபரே உயிரிழந்தார்.

காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்கான குறித்த நபர் உடனடியாக அரலங்கவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

## புதையல் தோண்டிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்திய பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அவுக்கன, பெம்முல்ல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 44, 43, 36 வயதுகளையுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இன்று தொடக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்படி, தற்போது வரையில் 3 ஆயிரத்து 500 ரூபாவைப் பெற்ற சமுர்த்திப் பயனாளர் குடும்பம் ஒன்றுக்கு 4 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவு கிடைக்கப்பெறும்.

2 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவைப் பெற்ற குடும்பத்துக்கு 3 ஆயிரத்து 200 ரூபா கொடுப்பனவும், ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவைப் பெற்ற குடும்பத்துக்கு ஆயிரத்து 900 ரூபா கொடுப்பனவும் கிடைக்கும்.

இதற்கமைய, எந்தவொரு சமுர்த்திப் பயனாளியும், சமுர்த்தி வங்கி மூலம், இன்று முதல் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மேலும் கூறினார்.

# 3 நாள்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இளைஞர் மயங்கி வீழ்ந்து மரணம்!

## பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா உறுதி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டிப் பகுதியில் 3 நாள்கள் மட்டுமே காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

3ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டியைச் சேர்ந்த 26 வயதுடைய ஜேசுதாசன் ஸ்ரனிஸ்லோஸ் எனும் இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞர் கடந்த 10ஆம் திகதி காய்ச்சலால் பீடிக்கப்பட்டதால் அன்று மாலை யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறச் சென்றுள்ளார்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் (12 ஆம் திகதி வீட்டுக்கு அருகில் திடீரென அவர் மயக்கம் போட்டு வீழ்ந்துள்ளார். அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக் கொண்டு வந்தபோது ஏற்கனவே உயிரிழந்ததை மருத்துவர்கள் உறுதி செய்தனர்.

உயிரிழந்த பின்பு மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் மரண விசாரணையைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

# வவுனியாவில் நேற்று அதிகாலை வெடித்துச் சிதறியது காஸ் அடுப்பு

## பொலிஸார் விசாரணை

(வவுனியா நிருபர்)

வவுனியா தெற்கு, சிங்களப் பிரதேச செயலக வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் நேற்று அதிகாலையில் காஸ் அடுப்பு வெடித்துச் சிதறியுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த வீட்டில் நேற்றுமுன்தினம் இரவு சமையலறையில் உணவு தயாரித்து முடிந்த பின் வீட்டார் உறங்கியுள்ளனர். இந்நிலையில், நேற்று அதிகாலை ஒரு மணியளவில் திடீரென காஸ் அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது.

லிட்ரோ எரிவாயு நிறுவனத்துக்குச் சொந்தமான 12.5 கிலோ எடை கொண்ட



சிலிண்டரே இவ்வாறு வெடித்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் வீட்டாரால் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், தடயியல் பொலிஸாரின் உதவியுடன் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர். (100)

## யாழில் கஞ்சா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்த சந்தேகநபர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 70 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 265 போதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புலனாய்வு பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட 29 வயதுடைய சந்தேகநபர் தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 265 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இருவருக்கிடையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் குருவிட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நாட்டின் நிலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய ஆட்சியால் நாடு சீரழிந்துள்ளது. நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் சென்றுள்ளது. நாடு மீண்டு எழ முடியாத நிலையில் உள்ளது.

ஆட்சி மாற்றமே தற்போதைய உடனடித் தேவையாகும். எனவே, நாட்டையும், மக்களையும், ஜனநாயகத்தையும் நேசிக்கும் மக்கள் பிரதிநிதிகள் ஓரணியில் உடன் திரள வேண்டும். அப்போதுதான் நாட்டை மீட்டெடுக்க முடியும்.

இல்லையேல் உலக வரைபடத்தில் இலங்கை இல்லாமல் போகும் நிலைமை தான் ஏற்படும். அவ்வளவு படுமோசமான நிலைமையில் நாடு உள்ளது - என்றார்.



# கிராம உத்தியோகத்தர் பிரிவு எல்லை மீள்நிர்ணயத்திற்கு கரைதுறைப்பற்று ஒருங்கிணைப்பு குழுவில் கடும் எதிர்ப்பு





முல்லைத்தீவு – கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை எல்லை மீள் நிர்ணயம் செய்வதற்குப் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 219 கிராமங்களைக் கொண்ட 46 கிராம அலுவலகர் பிரிவுகள் காணப்படுகின்றன.

இதில் பல கிராமங்களை இணைத்தல் தொடர்பாக 2014 ஆம் ஆண்டு முன்மொழிவுகளை ஆராய்ந்து அது தொடர்பில் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தின் ஊடாகவும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தின் ஊடாகவும் அனுமதி பெற்று அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கரைதுறைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் இதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

செம்மலை கிழக்கு, செம்மலை கிராம சேவையாளர் பிரிவை இணைத்து செம்மலை கிராசேவையாளர் பிரிவாகவும், குமுழமுனை மேற்கு, தண்ணிமுறிப்பு கிராம சேவையாளர் பிரிவினை இணைத்து தண்ணிமுறிப்பு கிராம சேவையாளர் பிரிவாகவும், முள்ளியவளை மத்தி, முள்ளியவளை தெற்கு கிராம சேவையாளர் பிரிவை முள்ளியவளை தெற்கு கிராம சேவையாளர் பிரிவாகவும், வண்ணாங்குளம், கோவில்குடியிருப்பு, மணல்குடியிருப்பு, முல்லைத்தீவு நகர், கிராம சேவையாளர் பிரிவுகளை இணைத்து முல்லைத்தீவு நகர் கிராம சேவையாளர் பிரிவு என்றும் நீராவிப்பிட்டிகிழக்கு, நீராவிப்பிட்டி மேற்கு கிராம சேவையாளர் பிரிவுகளை இணைத்து நீராவிப்பிட்டி கிராம சேவையாளர் பிரிவு என்றும் கணுக்கேணி கிழக்கு, கணுக்கேணி மேற்கு கிராம சேவையாளர் பிரிவுகளை இணைத்து கணுக்கேணி கிராம சேவையாளர் பிரிவு என்றும் புதிய கிராம சேவையாளர் பிரிவிற்காக எல்லை நிர்ணய முன்மொழிவுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 14 கிராம சேவையாளர் பிரிவுகளை இணைத்து 6 கிராம சேவையாளர் பிரிவுகளாக எல்லை நிர்ணயம் செய்யக் கோரப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பில் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு மக்கள் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

கிராம சேவையாளர் பிரிவுகளைக் குறைப்பதன் ஊடாக கிராமங்களுக்கான அபிவிருத்தி ஒதுக்கீடுகளில் பாரிய பிரச்சினை எழும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் கிராம மட்ட அமைப்புக்களுடனும் மக்கள் பிரதிநிதிகளுடனும் கலந்து ஆலோசித்து கூட்டம் நடத்தி முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# அணைத்து வைக்கப்பட்டிருந்த எரிவாயு அடுப்பு யாழில் வெடிப்பு!

யாழ். குருநகர் பகுதியில் உள்ள வீடொன்றில் சமையல் எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை பதிவாகியுள்ளது.

சமையல் வேலைகளை முடித்து விட்டு அடுப்பை அணைத்து வைத்த பின்னரே இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளதாகத் தெரியவருகிறது.

எனினும் சம்பவம் இடம்பெற்ற போது அருகில் எவரும் இல்லாமையால் அசம்பாவிதங்கள் எவையும் ஏற்படவில்லை என அறியமுடிகின்றது. அணைத்து வைக்கப்பட்ட அடுப்பு வெடித்துள்ள சம்பவம் மக்கள் மத்தியில் மேலும் அச்சத்தை உண்டாக்கியுள்ளது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நலிவுற்ற சமூகம் உருவாகிறது

இலங்கையில் கண், மண் தெரியாமல் உயர்ந்து வரும் விலைவாசி அதிகரிப்பால் சாதாரண பாமர மக்களின் உணவுப் பாதுகாப்பு நிலைமை, ஆரோக்கியம் மற்றும் ஊட்டச் சத்து மட்டம் ஆகியன மோசமாகப் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக ஐ.நா. முகவர் அமைப்பு எச்சரித்திருக்கின்றது.

ஐ.நாவின் உணவு, விவசாய நிறுவனம் தனது உலகளாவிய தகவல் மற்றும் முன்னெச்சரிக்கை முறைமை பற்றிய பிந்திய அறிவிப்பில் இந்த விடயத்தை வெளிப்படுத்தியிருக்கின்றது.

விலைவாசி உயர்வு காரணமாக இலங்கைப் பிரஜைகள் உணவு உள்கொள்வதைக் குறைத்துக் கொண்டுள்ளனர்; விலை மலிவான உணவுகளை நாடுகின்றனர்; அதனால் போஷாக்குக் குறைந்த உணவுகளை உள்கொள்ளுகின்றனர். இவை எல்லாம் அவர்களின் உணவுப் பாதுகாப்பு நிலைமை, ஆரோக்கியம் மற்றும் ஊட்டச் சத்து மட்டம் ஆகியவற்றில் பெரும் பின்னடைவு நிலையை ஏற்படுத்தியிருக்கின்றன என்று அந்த அமைப்பின் முன்னெச்சரிக்கை முறைமையில் கூறப்பட்டுள்ளது.

அரிசி, கோதுமை, சீனி ஆகியவை பொதுவாக இலங்கைப் பிரஜைகளின் கலோரித் தேவைகளில் முறையே 40, 12, 10 வீதங்களை நிறைவு செய்து வந்தன.

ஆனால், விலைவாசி உயர்வினால் பல குடும்பங்கள் இவற்றை உணவாக உள்ளெடுக்கும் போக்கைப் பெருமளவில் குறைத்துள்ளன. இது அவர்களின் உணவுப் பாதுகாப்பு நிலையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தப் போகின்றது என்று அந்த ஆய்வறிக்கை சுட்டுகின்றது.

அரிசிதான் இலங்கை மக்களின் பிரதான உணவுப் பொருள். கடந்த வருடம் செப்ரெம்பர், நவம்பர் மாதங்களில் அரிசி விலை அதிகரித்த போதிலும் டிசெம்பர் மாதத்தில் அதில் தளம்பல் அற்ற நிலைமை காணப்பட்டது. ஆனால் ஜனவரியில் அரிசி விலை திடீரென மீள அதிகரிக்கத் தொடங்கி அது உச்சத்தைத் தொட்டுள்ளது. இப்போது அது முந்தைய ஆண்டு இதே காலப் பகுதியில் நிலவிய விலையை விட ஐம்பது வீதம் வரை அதிகரித்திருக்கின்றது என அந்த அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

உரம் மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் பெரும் போகச் செய்கை முற்றாகத் தோற்று விட்டது. போதாக் குறைக்கு பணத்தின் பெறுமதி – ரூபாவின் மதிப்பு – வேகமாக வீழ்ந்து வருகின்றது.

இவை காரணமாக, மேற்படி அடிப்படை உணவுப் பொருள்களை சந்தையில் தாராளமாகக் கிடைக்கச் செய்வதற்கு அரசு எடுத்த முயற்சிகளும் பின்னடைவு கண்டுள்ளன என்ற உண்மையை ஐ.நா. முகவர் அமைப்பு விவரமாகத் தெளிவுபடுத்துகின்றது.

"போகும் வேகத்தில் அத்தியாவசிய – அடிப்படை – உணவுப் பொருள்களின் விலைகள் இன்னும் அதிகரிக்கப்படவும், அவற்றுக்கு பற்றாக்குறை – தட்டுப்பாடு – ஏற்படவும் அதிக வாய்ப்புகள் இருக்கின்றன" – என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

அத்தகைய நிலைமை ஏற்படுமானால், ஒரு நேர உணவைக் குறைத்துக் கொண்டிருக்கும் இலங்கைக் குடும்பங்களின் எண்ணிக்கை விரைந்து அதிகரிக்கும்.

அது, ஊட்டச் சத்து, போஷாக்கு இல்லாத ஒரு நலிவுற்ற சமுதாயத்தை நமது நாட்டில் நிலை நிறுத்தி விடும்.

மக்கள் அரைப் பட்டினியில் போட்டு, சமூகம் நலிந்து கொண்டிருக்கையில், உணவுப் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், வேறு ஏதோ பற்றி எல்லாம் பேசிக் கொண்டிருக்கின்றது அரசு. இது நமது நாட்டின் தலைவிதி.

# அரசியலில் இருந்து விலகி ஆஸி. செல்ல தயாராகும் ரஞ்சன்?

கடூழிய சிறைத்தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படாதமை தொடர்பில் கவலையில் இருக்கிறார் என சிங்கள இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இம்முறை சுதந்திர தினத்தில் தான் விடுதலை செய்யப்படாதமை தொடர்பில் அவர் கோபத்தில் இருக்கிறார் எனவும் தகவல்கள் கூறுகின்றன.

தனது வாய் தொடர்பில் வெட்கப்படுவதாகவும் கூறிய கருத்துக்களுக்காக கவலையை வெளியிட்டு, மன்னிப்பு கோரத் தயாராக இருப்பதாகவும் அண்மையில் தன்னை பார்க்க சென்றிருந்தவர்களிடம் ரஞ்சன் கூறியுள்ளார்.

இதனிடையே ரஞ்சன் ராமநாயக்க சிறையில் இருந்து விடுதலையானால், மீண்டும் அரசியலில் ஈடுபடுவதில்லை எனத் தீர்மானித்துள்ளார் எனப் பேசப்படுகிறது. அவர் ஆஸ்திரேலியாவுக்கு சென்ற நீண்டகாலம் தங்கி இருக்கத்தயாராகி இருக்கிறார் எனவும் தெரியவருகிறது.

ரஞ்சன் ராமநாயக்க தொடர்பாக இவ்வாறான செய்தி வெளியாகியுள்ள நிலையில், அவர் தரப்பில் இருந்து எவ்வித தகவல்களும் இதுவரை வெளியாகவில்லை.

# வடபகுதி வைத்தியசாலை விடுதிகளில் நோயாளர்கள் 10 பேருக்கு கொவிட்!

கிளிநொச்சி மற்றும் யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளின் நோயாளர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள 10 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் மாத்திரம் இந்தத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் பிறந்து 17 நாள்களேயான பச்சிளங்குழந்தையும் உள்ளடக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்டிஜன் பரிசோதனையின் மூலம் அடையாளப்படுத்தப்படுகின்ற தொற்றாளர்களின் விவரங்கள் நாளாந்தம் வெளியிடப்படுகின்ற அறிக்கையில் குறிப்பிடப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் பயன்தரு மரங்கள் காட்டு யானைகளினால் அழிப்பு!

கிளிநொச்சி – கண்ணகைபுரம் பகுதியில் காட்டு யானைகள் புகுந்து பெருமளவான பயன்தரு மரங்களை அழித்துள்ளன.

கண்ணகைபுரம் கிராமத்திற்குள் சனிக்கிழமை இரவு புகுந்த காட்டு யானைகள் வாழ்வாதார பயிர்களான தென்னை மற்றும் ஏனைய பயன்தரு மரங்களை அழித்துள்ளன.

சம்பவம் தொடர்பில் கிராம அலுவலரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் கிராம அலுவலர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

# குறைந்த போசாக்குணவுகளை உட்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள் இலங்கையர்கள்

## ஐக்கிய நாடுகளின் எச்சரிக்கை

இலங்கையில் விலையுயர்வு மற்றும் உணவுப்பற்றாக்குறை காரணமாக பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள், உணவு கொள்ளவைக் குறைத்துள்ளன.

அத்துடன் பெரும்பாலும் மலிவான, குறைவான சத்துள்ள உணவுகளுக்கு மாறியுள்ளதாக ஐக்கிய நாடுகளின் உணவு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது, இலங்கை மக்களின் உணவுப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் போக்கு நிலை ஆகியவற்றில் ஒட்டுமொத்த எதிர்மறையான விளைவை ஏற்படுத்தும் என்று நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்.ஏ.ஓ. என்ற ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, ஜனவரி 26 அன்று உலகளாவிய தகவல் மற்றும் முன் எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

அதில், அரிசி, கோதுமை மற்றும் சர்க்கரைப் பொருள்களின் சராசரி கலோரிகளான 40, 12 மற்றும் 10 சதவிகிதங்களை பல குடும்பங்கள் குறைத்துள்ளன.

பசளை நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் ரூபாவின் மதிப்பு சரிவு காரணமாக ஏற்பட்ட பணவீக்கம் காரணமாக பல குடும்பங்கள் தமது உணவு நுகர்வைக் குறைத்துள்ளன.

நாட்டின் முக்கிய உணவான அரிசியின் விலை கடந்த ஆண்டு செப்ரெம்பர் மற்றும் நவம்பர் மாதங்களுக்கு இடையில் பெரும்பாலான சந்தைகளில் உயர்ந்தது.

குறிப்பாக 2022 ஜனவரியில் விலைகள் கணிசமாக அதிகரிக்க ஆரம்பித்தன.

இந்த விலை அதிகரிப்பு, முன்னைய ஆண்டை விட 50 சதவீதத்துக்கும் அதிகமானது என்று ஐக்கிய நாடுகளின் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை கடந்த செப்ரெம்பர் பிற்பகுதியில் ஒரு லட்சம் தொன் அரிசியை இறக்குமதி செய்ய இலங்கை அரசாங்கம் முடிவு செய்தது,

இதனைத் தொடர்ந்து 2022 ஜனவரி தொடக்கத்தில் 3 லட்சம் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது.

இது, 2017 இற்குப் பிறகு இறக்குமதி செய்யப்பட்ட மிகப்பெரிய அரசி இறக்குமதியாகும் என்று ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு தெரிவித்துள்ளது.

# கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் டொலர்களை ஆட்சியாளர் கொள்ளையிட அனுமதியோம்!

## வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர்கள் கருத்து

தாம் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் டொலரை, ஆட்சியாளர்கள் கொள்ளையிட்டு சாப்பிட இலங்கைக்கு அனுப்பப் போவதில்லை என வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர்.

இணையத்தள வலையொளிக்கு நேர்காணலை வழங்கிய வெளிநாடுகளில் தொழில் புரியும் தென்னிலங்கையை சேர்ந்தவர்கள் இதனை கூறியுள்ளனர்.

தொழில் புரியும் நாடுகளில் வங்கிக் கணக்கை ஆரம்பித்து அவற்றை வைப்புச் செய்து வருவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். நாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் டொலர்களை கொள்ளை விலைக்கு இலங்கைக்கு அனுப்பப் போவதில்லை.

எங்களுக்குரிய எதனையும் ஆட்சியாளர்கள் கொள்ளையிட்டு சாப்பிட விட மாட்டோம். நாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் டொலர்களை இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பபடுவதை தேட வேண்டும்.

வெளிநாடுகளில் சம்பாதிக்கும் பங்களாதேஷ் பிரஜைகள் கார்களைக் கொள்வனவு செய்துக்கொண்டு அவர்களின் நாட்டுக்கு செல்கின்றனர்.

நாட்டின் ஆட்சியாளர்கள் தொடர்பாக மக்கள் கசப்படைந்துள்ளனர். அத்துடன் இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளில் தொழில் புரியும் மற்றும் வசிக்கும் இலங்கையர்கள் எவ்வித தேடிப்பார்புகளையும் மேற்கொள்ளவதில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நாடாளுமன்ற கதிரைகளை பிடிப்பதற்கான போட்டியின் தொடர்ச்சியே 13 ஐ கோருகின்றமையும் நிராகரிப்பதும்!

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் அரசியல் குழு அறிக்கை

இலங்கையின் அரசியல் அமைப்பில் இருந்துவரும் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு இந்திய அரசாங்கம் தனது அழுத்தத்தை இலங்கை அரசாங்கத்துக்குக் கொடுக்க வேண்டும் எனத் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட ஆறு தமிழ்க் கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடந்த மாதம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தனர். அதேவேளை பதின்மூன்றாம் திருத்தம் ஒற்றையாட்சிக்கு உட்பட்டதென்றும் அதனை நிராகரிக்க வேண்டும் எனக் கூறி அதனைச் சவப்பெட்டியில் வைத்துக் கூட்டம் நடத்தியிருக்கிறது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

இவ்வாறு தெரிவித்துள்ளது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் அரசியல் குழு.

அதன் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இவ்விரு தமிழ்த் தேசியவாதத் தரப்புகளின் பதின்மூன்றாவது திருத்தம் பற்றிய ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளையும் வாதப் பிரதிவாதங்களையும் நோக்கும்போது, அன்றைய பொன்னம்பலம் -செல்வநாயகம் கால நாடாளுமன்றப் பதவிகளுக்காகப் போட்டியிட்டு வந்த தமிழர் மேட்டுக்குடி ஆதிக்க அரசியலின் தொடர்ச்சியையே காண முடிகிறது. இது ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்தைத் தொடர்ந்தும் தமிழ்த் தலைமைகள் தமது பழைமைவாதப் பிற்போக்குத் தமிழ்த் தேசியவாத நிலைப்பாடுகளாலும் தூர நோக்கற்ற கொள்கைகளாலும் ஏமாற்றி வரும் போக்கையே வெளிக்காட்டி நிற்கிறது. இவ்வாறு தமிழ்த் தலைமைகளிடையே இடம்பெற்று வரும் பதின்மூன்றாவது திருத்தம் பற்றிய அண்மைய விவாதம் பற்றி புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் அரசியல் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பதின்மூன்றாவது திருத்தம் என்பது முப்பத்தி நான்கு வருடங்களுக்கு முன்பு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கையின் அரசியல் யாப்பிற்குக் கொண்டுவரப்பட்ட ஒரு திருத்தமாகும். இது அன்றைய சூழலில் இலங்கையின் இன முரண்பாட்டைப் பயன்படுத்தித் தமது பிராந்திய மேலாதிக்க நலன்களுக்காக இந்தியாவால் வலிந்து திணிக்கப்பட்டதாகும். தமிழ் மக்கள் உள்ளிட்ட ஏனைய மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாததும், மிகக் குறைந்த அதிகாரங்களைக் கொண்டதாகவும் பதின்மூன்றாவது திருத்தம் அமைந்திருந்த காரணங்களால் எமது கட்சி அன்று பதின்மூன்றாவது திருத்தத்துக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. அதற்குக் கீழ் இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலில் பங்குகொள்ளவும் இல்லை.

ஆனால், கடந்த முப்பத்தி நான்கு ஆண்டுகளில் தொடர்ந்து வந்த சிங்கள பௌத்த ஆளும் வர்க்கக் கட்சிகள் பல வழிகளிலும் பதின்மூன்றாவது திருத்தத்தை செயலிழக்கச் செய்யவும் இல்லாதொழிக்கவும் முயன்று வந்துள்ளன. இந்தச் சூழலிலேயே இலங்கை அரசியல் யாப்பில் தேசிய இனப்பிரச்சினையைக் குறைந்த அளவிலேனும் அடையாளப்படுத்தும் ஒன்றாகப் பதின்மூன்றாவது திருத்தம் இருந்து வரும் யதார்த்தத்தை நிராகரிக்க முடியாது. பதின்மூன்றாவது திருத்தத்திலிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளவும் உட்படுத்திக் கொள்வதுடன் நடைமுறைப்படுத்தாது விடப்பட்டவற்றை அமுல்படுத்த வேண்டும்.

அத்துடன் இன்றைய நிலைமைகளுக்கு ஏற்ப அதிகாரப் பகிர்வை விரிவுபடுத்தி உட்புகுத்த வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் எமது கட்சி நீண்ட காலத் தீர்வாக முன்வைத்து வருகின்ற முழுமையான பிராந்திய சுயாட்சிக்குரிய அடிப்படைகளை நோக்கி இந்தப் பதின்மூன்றாவது திருத்தத்தை விரிவுபடுத்துவதிலிருந்து ஆரம்பிக்க முடியும். இதனைச் சமாதானமாகப் பேசி சிங்கள பௌத்த பேரினவாத ஆளும் வர்க்க சக்திகளிடம் பெற்று விட முடியும் என எமது கட்சி நம்பவில்லை. ஆனால் அதனை வென்றெடுப்பதற்கு உறுதியான கொள்கை அடிப்படையிலான வேலைத் திட்டத்தையும் அதற்கான வெகுஜனப் போராட்டத்தையும் பரந்த முற்போக்கு ஜனநாயக இடதுசாரி சக்திகளுடன் இணைந்து செயற்படுவதை எமது கட்சி முதன்மைப்படுத்துகிறது.

நான்கு தேசிய இனங்களையும் சிறுபான்மைச் சமூகங்களையும் உள்ளடக்கிய இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான பிராந்திய சுயாட்சியும் உட் சுயாட்சிக் கட்டமைப்புகளும் நிறுவப்படுவதையும் அதனை அரசியல் யாப்பு வாயிலாக உறுதிப்படுத்துவதையும் எமது கட்சி தேசிய இனப்பிரச்சினைக்குரிய அரசியல் தீர்வாக வலியுறுத்தி வருகிறது. அத்தகைய அமைப்பு நீண்ட காலத்திலேயே வென்றெடுக்க முடியும் என்பதால், அதனை நோக்கிய நீண்ட அரசியல் போராட்டப் பயணத்தில் அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை நிராகரிப்பதற்குப் பதிலாக அரசியல் யாப்பு அடிப்படையில் மேலும் அதற்குரிய பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளப்பெற்று விரிவாக்கி வலுப்படுத்தி முன்னெடுக்க வேண்டும். இதனை வலியுறுத்தி மக்களை ஐக்கியப்படுத்தும் மக்கள் திரள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதனைச் செய்யாது இந்தியாவிடம் மண்டியிட்டுக்கொள்வதோ அல்லது அமெரிக்காவிடம் கெஞ்சி நிற்பதோ அல்லது புலம் பெயர்ந்த தமிழர் மேட்டுக்குடி அமைப்புகளையும் அவர்களது பணக் கட்டுகளையும் நம்பி இனவாத முழக்கங்களை எழுப்பி வாக்குவங்கி அரசியல் செய்வதோ பயனற்றவையாகும்.

எனவே, பேரினவாத ஒடுக்குமுறையை அனுபவித்து வரும் தமிழ்த் தேசிய இனம், இதுவரையான பட்டறிவின் ஊடாக உரிய படிப்பினையைப் பேசவேண்டும்.

அதற்குரிய மாற்றுச் சிந்தனைச் செயற்பாட்டுத் தளங்களில் இளந் தலைமுறை வழிநடக்க முன்வர வேண்டும் எனும் அறைகூவலையே எமது கட்சி விடுக்கின்றது. - என்றுள்ளது.

# எரிபொருள் விலைகளின் சூத்திரம் மீண்டும் அமுல்



எரிபொருள் விலை சூத்திரம் மீண்டும் அமுல்படுத்தப்படும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். இது தொடர்பான சூத்திரம் ஏற்கனவே வரையப்பட்டு எதிர்வரும் 21ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கடந்த அரசாங்கம் கொண்டு வந்த எரிபொருள் விலை சூத்திரத்தை தற்போதைய அரசாங்கம் நீக்கி புதிய சூத்திரத்தை தயாரித்துள்ளது.

# இரு பிள்ளைகளின் தந்தை விபத்தில் பரிதாபகரச் சாவு

ஹொரணை - கொழும்பு வீதியில் கோரலகம பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் ஹொரணை, கோனபால பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்று காலை தனது வீட்டில் நடைபெறவிருந்த அன்னதான நிகழ்விற்காக ஒருவரை அழைத்து வருவதற்காக வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்ற போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஓட்டோவுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் ஓட்டோ வீதியில் கவிழ்ந்ததில் ஓட்டோவின் ஓட்டுநரின் தலையில் பலத்த அடி பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மதுருஓயா இராணுவ விசேட பயிற்சி பாடசாலையின் லெப்டினன்ட் எனத் தெரிய வந்துள்ளது.

மேற்படி மோட்டார் சைக்கிள் அதிக திறன் கொண்ட மோட்டார் சைக்கிள் எனவும் அது நாட்டில் ஓட்ட அனுமதிக்கப்படுகிறதா என்பது தொடர்பாக விசாரித்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்தின் போது மேலும் நான்கு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் சம்பவ இடத்திற்கு வந்து லெப்டினன்ட்டை அழைத்துச் செல்ல முயன்றனர் எனவும் கூறப்படுகிறது.

பின்னர் அப்பகுதி மக்கள் தலையிட்டு விபத்தை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிளின் சாவியை கழற்றி எடுத்ததால் அது தவிர்க்கப்பட்டது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த சந்தேக நபரும் காயமடைந்து ஹொரணை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# ஊடகவியலாளர் சத்தியமூர்த்தியின் 13 ஆம் ஆண்டு நினைவு அனுஷ்டிப்பு




ஊடகவியலாளர் நாட்டுப்பற்றாளர் பு.சத்தியமூர்த்தியின் 13 ஆம் ஆண்டு நினைவுதினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற நினைவுதின நிகழ்வில் அன்னாரின் உருவ படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு தீபமேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தமையுடன் சத்தியமூர்த்தியின் அனுபவங்கள் தொடர்பாகவும் இதன்போது பகிர்ந்து கொள்ளப்பட்டது.

ஊடகத்துறையில் 1990 களில் இருந்து ஈடுபடத் தொடங்கிய இவர், 2009 பெப்ரவரி 12 ஆம் திகதி இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் சிக்கி படுகாயமுற்று சிகிச்சைபெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் சுமார் 99 வீதம் நோயாளர்களில் ஒமிக்ரோன் மாறுபாடு அடையாளம் கண்டறிவு!




இலங்கையில் தற்போது பதிவாகியுள்ள கொரோனா நோயாளர்களில் சுமார் 99 வீதம் பேர் ஒமிக்ரோன் வகையால் பாதிக்கப்பட்டவர்கள் என சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

டெல்டா மாறுபாட்டின் இருப்பு படிப்படியாக மறைந்து வருவதாக சுகாதார அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் ஊடகமொன்றுக்குத் தெரிவித்தார்.

முன்னதாக, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகமும் இலங்கையில் ஒமிக்ரோன் மாறுபாடு ஆதிக்கம் செலுத்துவதாக அறிவித்தது.

கொரோனா நோயாளர்களுக்கு தேவையான படுக்கைகள் இலங்கையின் வைத்தியசாலைகளில் இருக்கின்றன எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கூடுதலாக, கொரோனா நோயாளிகளுக்கு ஐ.சி.யு. படுக்கைகள் பற்றாக்குறையாக இருக்கின்றன எனச் சுகாதார அமைச்சகம் கூறியது தவறானது என்றும் அதனை சுகாதார அமைச்சு நிராகரித்தது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 280

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**710.இந்தியாவை பொறுத்த மட்டிலும் அவர்களது தலையீட்டினாலும் தமிழ் மக்களது அபிலாஷைகள் எவையாக இருந்தன?**

தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில், இந்தியா, ஒரு தொப்புள் கொடி உறவாக, சிங்கள மக்களுக்கு எதிராகத் தங்களோடுதான், ஆதரவாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. இந்தியா தலையீடு செய்து பங்களாதேசம் என்ற நாட்டை உருவாக்கியது போல் தமிழ் மக்களையும் சிங்களத்திலிருந்து பிரித்து தமிழீழத்தை உருவாக்கி தர வேண்டும் என்ற எண்ணங்களில் இருந்தார்கள்.



பத்மநாபா

ஆனால், இந்திய ராஜதந்திரங்களில், யதார்த்தங்களின் அடிப்படையில், பாரதியார் பாடியது போல் சிங்கள தீவுக்கோர் பாலம் அமைப்போம்" என்ற அணுகுமுறையே இருந்தது. சுதந்திரம் வந்த நாள்களிலிருந்தே தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கை சமஷ்டியாகத்தான் இருந்தது.

வட்டுக்கோட்டைத் தீர்மானம், தமிழ் அரசியல் தலைவர்களால் புதுடெல்லியோடு பேசி ஏற்பட்ட ஒரு ஒப்புதலில் நிறைவேற்றபட்டதல்ல. இது, உள்நாட்டு அரசியல் விவகாரமாகவே பார்க்கப்பட்டது. சமஷ்டி என்ற அரசியல் கோரிக்கையில் யதார்த்தம் இருந்தது. ஏனெனில் காலனித்துவ காலங்களில் வடக்குக் கிழக்கிலிருந்த பெருவாரியான தமிழ் மக்கள் ஸ்ரீலங்காவின் எல்லாப் பகுதிகளிலும் குடியேறி, நிரந்தர வாசிகளாக வேர், விழுதுகள் விட்டிருந்தார்கள். அத்தோடு இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் மலையகத்தை வதிவிடமாக கொண்டிருந்தார்கள். அவர்கள் யாவரையும் உள்ளடக்கியதாக சமஷ்டி அமைப்பு அமைந்திருக்கும் எனக் கருதப்பட்டது.

பாகிஸ்தான் மேற்கு, கிழக்கு என, பல மைல்களால் பிரிக்கப்பட்ட இரண்டு பிரதேசங்களாக இயங்கின. மேற்கில் உருது பேசும் முஸ்லிம் மக்களும், கிழக்கில் வங்காள மொழி பேசும் முஸ்லிம்களும் கணிசமாக – தனித்துவமாக – வாழ்ந்தனர். இரு பகுதிகளிலும் ஸ்ரீலங்கா போல இரு பகுதியினரும், ஒவ்வொருவருக் கிடையே மற்றவர் செறிந்து வாழவில்லை. ஆகவே அதனை பிரிப்பதில், 1947இல் இந்தியா – பாகிஸ்தான் பிரிவினையில் நடந்தது போல் பாரிய மக்கள் இடப்பெயர்வு நடக்க வேண்டிய தேவையிருக்காது என்பது கணக்கில் கொள்ளப்பட்டது. ஸ்ரீலங்காவிலோ, 1977, 1983இன் கலவரங்கள், அதன் தாக்கங்கள், அதன்பின் தமிழ் மக்களின் புலம் பெயர்வுகள், பலர் தங்களுடைய வாழ்வாதாரங்களுக்காகத் திரும்பவும் கொழும்புப் பகுதியின் சுற்றாடலிலேயே குடியேறியமை போன்றனவும் சிந்திக்கப்பட்டு சமஷ்டிக்கான தீர்வு முறையே வலியுறுத்தப்பட்டு, மாகாண சபை அமைப்பு இணக்கப்பாட்டு முயற்சியாக முன்னெடுக்கப்பட்டது. சிங்களப் பேரினவாதம் இவ்வகையான இணக்கப்பாட்டுக்கு குந்தகங்கள் விளைவித்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய தீர்மானங்கள் கருத்தில் இருந்தன.

வட்டுக்கோட்டைத் தீர்மானம், 1977, 1983 வரை கலவரங்கள் அவற்றை தொடர்ந்தவைகளிலிருந்து, மாகாண சபை அமைப்புக்களுக்கு பொது தர மேல் நிலைப்படிப்பிற்கு வரும் நிலையிலும் காலகட்டத்திலும் தமிழ் மக்கள் வந்திருந்தார்கள். இவர்கள் அதனைப் படித்துத் தேர்ச்சியும் சித்தியுமடைய முன்னரே, பல்கலைக்கழக சான்றிதழ் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையைத்தான் விடுதலைப் புலிகள் அவர்கள் முன் நிர்ப்பந்தித்தார்கள்.

இவற்றின் அனுகூலங்களும், வழிமுறைகளின் தெளிவும் இந்திய படைகள் வெளியேற ஒத்துக் கொள்ளப்பட்டபின், சிங்கள பேரினவாதத்தால் பிரேமதாஸா ஆட்கொள்ளப்பட்டதிலிருந்து, விடுதலைப் புலிகள் உணர்ந்து கொண்டார்கள். அப்படியிருந்தும் ஏகோபித்த தலைவர்களாக தங்களது நிலையை உறுதிப்படுத்த விழைந்தார்களே ஒழிய, தமிழ் மக்களின் பொது நன்மைகளைக் கருதவில்லை.



பிரேமதாஸாவுடன் பேச்சு நடத்த வன்னிக் காட்டிலிருந்து இலங்கை விமானப் படை ஹெலியில் கொழும்பில் வந்திறங்கும் புலி உறுப்பினர் யோகியும் பாலசிங்கம் தம்பதியினரும் ஏனையோரும்.

**711.பிரேமாதாஸாவுடனான் பேச்சுவாத்தைகளைக் குறிப்பிடுகிறீர்களா?**

அவர்களது முதல் கட்ட பேச்சு வார்த்தைகள் ஸ்ரீலங்கா அரசுடன் இணைந்து, அவர்களும் இந்திய படைகளின் வெளியேற்றத்தை கேட்க வேண்டும் என்பது. பாலசிங்கம் பிரேமதாஸாவின் அழைப்பின் பேரில், பேச்சு வார்த்தைகளுக்காக கொழும்பிற்கு வந்திருந்தாராயினும், விடுதலை புலிகள், காட்டிற்குள் தங்கள் மறைவிடங்களில்தான் தங்கியிருந்தார்கள். அந்தப் பகுதிகள் இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தன. அவர்கள் வெளியேறி, பேச்சுவார்த்தைகளுக்கு வருவது இந்திய தரப்பில் தங்கியிருந்தது. பிரேமதாஸாவை பற்றிய கணக்கு இந்தியத் தரப்புக்கு நம்பிக்கை தருவதாக இல்லாவிட்டாலும், விடுதலை புலிகள் அவர்களுடன் நேரடித் தீர்வை ஏற்படுத்துவதில் இந்தியா எதிராக நிற்கவில்லை. ஆகவே, இந்திய ஆளுமையில் இருந்த பகுதிகளில் இலங்கைப் பாதுகாப்புப் படையினரின் ஹெலிக்கொப்டர்கள் இறங்கி, விடுதலை புலிகளை பேச்சு வார்த்தைக்கு அழைத்து செல்ல அவர்கள் அனுமதி தந்தார்கள். அப்படியான அனுமதிகளில் சென்றவர்கள், வழமை போலவே, பிரேமதாஸாவுடன் இணைந்து, இந்தியாவை எப்படி இருவரது நன்மைக்காக வெட்டி வெளியேற்றுவது என்று பேசினார்களேயொழிய, ஒரு தீர்வின் அடிப்படையில் அவர்கள் வெளியேறலாம் என்று பேசவில்லை.



வரதராஜப்பெருமாள்



பிரேமதாஸாவுடன் பேச்சு நடத்தும் பாலசிங்கம்

இந்தியா வெளியேறிய பின், உள்நாட் டில் விளைந்த உள்நாட்டிற்கு ஏறத்தான தீர்வு (Home grown solution) ஒன்றை விடுதலை புலிகளுடன் பேசித் தருவதற்கு பிரேமதாஸாசா ஒப்புக் கொண்டார். இதைப் புலிகளும் ஏற்றுக் கொண்டமை அரசியல் அனுபவக் குறைவு. அல்லது இந்தியாவை வெளியேற்றி விட வேண்டும் என்ற துடிப்பா என்று புரிந்து கொள்வது கஷ்டம். இந்தியப் படைகளின் வெளியேற்றம் நிச்சயப்படுத்தப்பட்டு, இந்தியப் பிரதமர் வி.பி.சிங் அறிவிப்புகள் செய்ததும், பிரேமதாஸா சிங்கள பெரும்பான்மையின் முகவராக, தீர்வினைப் பற்றி முன்னுக்குப் பின் முரண்பாடாகப் பேசினார்.

படைகள் மீளப் பெறப்பட்டாலும், மாகாண சபை முறைகளை அமுல்படுத்துவதில் இந்தியா தீவிரமாக இருக்கும் என்பதில் வி.பி.சிங்கும் ஆணித்தரமாக இருந்து, தனக்கு அனுசரணையான தமிழக முதல்வர் கருணாநிதியை, ஸ்ரீலங்கா அரசைச் தவிர்த்து, ஈ.பி.ஆர்.எல்.எவ்., விடுதலை புலிகள் ஆகிய இரு பகுதியினருடனும் சமாதானம் பேசி, மாகாண சபைகளை ஒன்றாக ஏற்று நடத்துமாறு அறிவுரை செய்யப் பணித்தார். கருணாநிதி கேட்டதற்கு இணங்க, வரதராஜபெருமாளும் பத்மநாபாவும் அவரைச் சந்திக்க இணங்கினர். பிரேமதாஸாவுடன் பேச்சு வார்த்தையில் இருந்த பாசிங்கமும், போகியும் உடனடியாக சென்னைக்கு விரைந்து பேச்சு வார்த்தைகளில் பங்கு பற்றினார்கள்.

**712.அந்த பேச்சு வார்த்தைகளில் நடந்தவை என்ன?**

(அதனை நாளை பார்ப்போம்)

# ஆதலினால் காதல் செய்வீர்!

- சிந்துஜா -
(சமூக ஆர்வலர்)



காதல் என்ற ஒற்றை வார்த்தைகளுக்கு எங்கும் எதிலும் பொருள் சொல்லப்பட வில்லை. காதல் எங்கோ இருக்கிற பொருளும் அல்ல. ஆனால், அதை பேசாத சங்க இலக்கியமும் இல்லை, சரித்திரமும் இல்லை.

அப்படி என்ன காதல் பேசுகிறது? காதல் என்பது இருவர் சம்பந்தப்பட்ட விடயம் என்பதாலேயே - இது மனங்களின் அந்தரங்கம் என்பதாலேயே - காதலை நம் முன்னோர்கள் அகம் என்றார்கள். அகம் என்பது உள் என்று பொருள்.

காதலை நுட்பமும் ஆழமும் கூடிய உணர்வாகப் பார்த்தவர்கள் நாம். இதை எழுத்தாளர் பிரபஞ்சன் தமது கட்டுரைகளில் மிக அழகாக எடுத்துக் காட்டியிருப்பார்.

காதலை மறைபொருள் என்று நினைத்தோம். மலரினும் மெல்லியது காதல் என்று நெறிப்படுத்தினோம். காதலும் காமமும் ஒன்றாகக் கலந்து பேசுகின்றன.

ஒரு பெண்ணும் ஆணும் காதலிக்க மரத்தடி நிழலுக்கு சென்று சேர்கிறார்கள். அவள் அந்த மரத்தடி வேண்டாம். அங்கு போகலாம் என்று தூரத்தில் உள்ள மரநிழலைக் காட்டுகிறாள். ஏன் என்று அவன் கேட்கிறான். இவள் பதில் கூறினாள், ஒரு நாள் விளையாடும் போது அம்மா குரல் கேட்க, அவசரமாய்ப் புன்னைக் காய்களைத் திரட்டிக்கொண்டு வீட்டுக்கு ஓடினேன். அப்போது மண்ணிலே தங்கிப்போன ஒரு புன்னை, அன்றிரவு பெய்த மழையால் முளைத்துவிட்டது.



அம்மா எனக்கு ஊட்டும் அன்பு அனைத்தையும் புன்னை செடிக்கும் ஊட்டினேன். புன்னை மரமாயிற்று, நானும் வளர்ந்தேன். நானும் புன்னை மரமும் தங்கைகள் ஆனோம். நான் இந்தப் புன்னையைத் தங்கையாகவே நினைத்து வந்தேன். அந்த மரநிழலில் காதலிக்க முடியுமா? தங்கையின் முன்னாலே எப்படிக் காதலிப்பது ?

இப்படி காதலையும் காதலர்களையும் அந்தரங்கத்தையும் மறை பொருளையும் அப்படி காப்பாற்றியவர்கள் நாம். தமிழில் ஆதி இலக்கியத்தில் சரிபாதிக்கு மேலாக அக இலக்கியங்கள் என்று பொதுவாக ஓர் உண்மை முன்வைக்கப்படுகிறது. காதலை கசிந்து உருகுகிற நம் மூதாதையரைப் பாருங்கள். சங்க இலக்கியம் தொட்டு நிலவுக்குள் ஊறி, ஊறி காதல் நம்மை தித்திக்க வைக்கிறது. இதில் உணர்வுகளும் உண்மைகளும் மட்டுமே மூத்தவை. அதில் காதல் மாத்திரம், இன்னும் இளைமையாகவே இருக்கிறது. இதை குறுந்தொகையில்

**யாயும் யாயும் யாராகியரோ**
**எந்தையும் நுந்தையும்**
**எம்முறை கேளீர்**
**செம்புல**
**பெயல் நீர்ப்போல்**
**அன்புடை**
**நெஞ்சம்தாம்**
**கலந்தனவே**
**கலந்தனவே**

என்ற உணர்வுகள் ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் நமக்குள் கேட்கிறது. குறுந்தொகை தொடங்கி எல்லா இலக்கியங்களும் பேசிகொண்டே இருக்கின்றன. இப்படி, காதலை மனித மனத்தை வடிவமைப்பதில் மண்ணுக்கும் இயற்கைச் சூழ்நிலைக்கும் உரிய இடத்தை சங்க இலக்கியம் வரையறுத்திருக்கிறது.


காதல் வெறும் உடலுறவு அல்லவே. ஆனால், உடலும் சேர்ந்தே காதல். பெண் மற்றும் ஆணின் விரல்கள் தீண்டுதலில் தீண்டுபவை விரல்கள் அல்ல. மாறாக, ஓர் இனத்தின் நாகரிகம் தன்னைத் தானே ஸ்பரிசித்துக் கொள்கிறது என்பதே பொருள்.

பெண்ணின் உலகம் ஆணை நம்பியும் அவன் அன்பை எதிர்பார்த்துமே இருந்தது என்பதையும் கூடிய புரிதலோடேயே அந்தப் பழைய இலக்கியத்தை அணுக வேண்டும். அவை உன்னதமானவை அல்ல மாறாக, அந்தக் காலத்தை உண்மையாக நாடகியமாகச் சொல்பவை. காதல் உலகத்தில் ஆண் ஒரு முதலாளியைப் போல, பொலிஸ்காரனைப் போல நடந்து கொள்ளும் போது காதல் துளிர்ப்பதில்லை. காதல் அந்த மனிதரின் விடுதலை கூர் உணர்வில் தோன்றும் இயற்கை விளைவு. இந்தச் சமூகம் காதலை புரிந்து கொள்ளும் சமூகமாக இல்லை. இந்தியசனத்தொகையில் பெருபான்மையோர் வன்புணர்ச்சியில் பிறந்தவர்கள். ஏனெனில் சகாவான பெண் சம்பந்தப்பட்டு தாயாவதில்லை. இந்த தேசத்தில் காதல் தொழிலில் சமபங்கு ஆற்றாத பெண் காதலியாகக் கருதப்படலாமோ எனில் மாட்டாள். மாறாக அவள் சுரண்டப்படும் மற்றுமொரு தொழிலாளியே ஆவாள்.

அடுத்தது அழகு. காதல் அழகோடு இணைத்து பேசப்படுகையில் ஆச்சரியமாக இருக்கிறது. உண்மையில் அழகு என்பதே ஒன்றில்லை. அழகில்லாதது என்பதும் ஒன்று இல்லை. எது இயல்பாக இருக்கிறதோ அது அழகு. எது இயல்புக்கு விரோதமாக இருக்கிறதோ அது ஆபாசம்.

அழகு பற்றி ஒரு ரஷ்ய எழுத்தாளர் அருமையான கதை ஒன்று தந்துள்ளார். போர்க்களத்தில் பீரங்கியால் தாக்கப்பட்ட, ஒரு வீரனின் முகமே சிதைந்து போகிறது. 18 மாத சிகிச்சைக்குப் பிறகு அவன் உயிர் பெறுகிறான். அவன் முகமே அவனுக்கு அடையாளம் தெரியவில்லை. குரலும் மாறிவிடுகிறது. அவன் விடுமுறையில் தாய் தந்தையைப் பார்க்கப் போகிறான்.

கதவைத் தட்டுகிறான். கதவைத் திறந்த அம்மா, ‘யாருப்பா நீ?’ என்கிறாள். அவன் மகனின் நண்பன் என்கிறான். அம்மா, அப்பாவிடம் அவர்களின் மகனின் வீரம் பற்றி அவனே சொல்கிறான். மறுநாள் திரும்பும் முன், அந்த மகனின் சினேகிதியைப் பற்றி விசாரிக்கிறான். இராணுவ முகாமுக்குத் திரும்புகிறான். அவன் தாயிடமிருந்து ஒரு கடிதம் வந்து இருந்தது. அதில்



மகனே, உன் நண்பன் ஒருவன் வந்து நம் வீட்டில் தங்கியிருந்தான். எனக்கென்னவோ வந்தவன் நீதான் என்று தோன்றுகிறது. உண்மையை எழுது” - என்று எழுதிருந்தாள். மகன் உண்மையை எழுத தாயும், சினேகிதியும் இராணுவ முகாமிற்கு வருகிறார்கள்.

“ஏண்டா என்னிடம் பொய் சொன்னே?”

‘இந்தக் கோரமுகத்தை என்னாலேயே சகிக்க முடியவில்லையே. உனக்கு எப்படி பிடிக்கும்?” என்றான் அவன்.

“இப்போதுதானடா உனக்காக நான் பெருமைப்படுகிறேன். என் மகன் தாயகத்துக்காகப் போராடிய வீரன் அல்லவா? அதுதானடா என் பெருமை.” - என்றாள்.

சினேகிதியைப் பார்த்து அவன் கேட்கிறான். “இப்போதும் இந்த முகத்தை நீ விரும்புவாயா? - என்று வினா எழுப்புகிறான்.

முட்டாள்'' என்று அவன் முகத்தில் முத்தமிட்டபடியே சொல்கிறாள் ”இப்போதுதானடா நான் உன்னைக் காதலிக்கிறேன்.”

**புரிதலில்**
**புரிந்துணர்வு ஒப்பந்தமே**
**காதல்**
**அதில்**
**நெடுந்தூரப் பயணம்**
**திருமணம்**
**அதில்**
**அவன் அவனுமாய்**
**அவள் அவளுமாய்**
**ஒன்றாக பயணம் செய்யின்**
**அதுவே பயணத்தின் இலக்கு**

காதல் எங்கோ இருக்கிற பொருள் அல்ல. அது நம்மிடம்தான் இருக்கிறது. நாம் ஆணோ, பெண்ணோ! நமக்களிக்கப்பட்ட தொழிலை நேசிப்போமெனில் நாம் வீரர்கள், அறிஞர்கள், அழகர்கள், மொத்தமாக மக்கள். நாம்தான் காதலிக்கப்படுவோம். ஆதலினால் காதல் செய்வீர்!

## மண்ணையும் காதல்செய்!

**தினம் பார்த்து வருவதில்லை**
**இனம் பார்த்து வருவதில்லை**
**பணம் பார்த்து வருவதில்லை**
**சனம் பார்த்து வருவதில்லை**
**மனம் பார்த்து வருவதுதான் காதல்**

**மனிதக்காதலை மண்மீதும் செலுத்து**
**பொன் விளையும் பூமி சிரிக்கும்**
**தமிழா உன் உணர்வுக்காதலை**
**தாய் நிலத்தின் மீதும் செலுத்து**
**தமிழும் வாழும் தமிழனும் வாழ்வான்**

**உண்மைக்காதல் உயிர் உள்ளவரைக்கும்**
**ஊமைக்காதல் கண் மறையும் மட்டும்**
**உதட்டுக்காதல் பகட்டுக்காய் மட்டும்**
**உள்ளத்தால் காதல் செய் எந்நாளும்**
**உறவை மட்டுமல்ல உரிமையையும்**

**பெண்மீது ஆண் காதல் கொள்**
**ஆண்மீது பெண் காதல் கொள்**
**அது தப்பில்லை ஆயினும்**
**உன் மண்மீதும் காதல் செய்**
**தன்மானம் கொண்ட தமிழனாகவே**
**தமிழையும் தினம் தினம் காதல் செய்**

- அம்பிகாபுரத்திலுறையூர் அரியம் -

# ராஜபக்ஷ அரசின் நிலைப்பாட்டை வடக்கில் மறைமுகமாக வெளிப்படுத்துகிறது முன்னணி!

## கஜேந்திரகுமாருக்கு சிவசக்தி ஆனந்தன் சாட்டை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது கஜேந்திர குமாரின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு இருக்கும் பிரச்சினையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியையும் விமர்சித்து ஏனைய தரப்புக்களையும் விமர்சித்துக் கொண்டு தமிழ்த் தேசியத்துக்குள் ஓர் எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கின்றார்கள் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலாளரும், ஈபி.ஆர்.எல்.எப் கட்சியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணி 13 ஐ எதிர்த்து பேரணியொன்றைச் செய்து பிரகடனத்தை வெளியிட்டுள்ளமை தொடர்பில் உங்களுடைய நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர் கேள்வி எழுப்பிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கஜேந்திரகுமார் போராட்டத்தை நடத்தியிருக்கின்றார். அதில் பிரகடனமும் வெளியிடப்பட்டிருக்கின்றது. நாங்கள் 13 ஆவது திருத்த சட்டத்தை ஏற்றுக்கொண்டு கடிதம் அனுப்பியதாக பிரகடனம் மற்றும் பேரணி சொல்கிறது.

மக்களுக்காக பேரணிகளை அல்லது பிரகடனங்களை செய்வதை நான் விமர்சிக்கவில்லை. அது மக்கள் ஆணை பெற்ற அரசியல் கட்சி ஒன்றின் கடமை. அதை அவர்கள் நகர்த்த வேண்டும். அவர்களின் கொள்கையின் பால் அவர்கள் செயற்பட வேண்டும்.

ஆனால் கஜேந்திரகுமாருடைய குற்றச்சாட்டுக்கள் அப்பட்டமான பொய்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது அவருக்கிருக்கின்ற பிரச்சினையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியையும் விமர்சித்து ஏனைய தரப்புக்களையும் விமர்சித்து கொண்டு தமிழ்த் தேசியத்துக்குள் ஓர் எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கின்றார்கள். அவர்கள் இன்று 13 ஆவது திருத்தச் சட்டம் வேண்டாம் என்று சொல்வதும் நாங்கள் 13 இற்குள் சென்றுவிட்டோம் என்று பொய்ப்பிரசாரம் செய்வதும் மறைமுகமாக ராஜபக்ஷ அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வடக்கில் வெளிப்படுத்துவனவாக இருக்கின்றன.

ராஜபக்ஷக்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது. மகாணசபைகள் வெள்ளை யானைகள். எந்தவொரு அதிகாரப்பகிர்வும் கிடையாது. ஒரே நாடு ஒரே சட்டம் என்றெல்லாம் அவர்கள் சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள்.

ஆகவே, ராஜபக்ஷ சொல்வதைத்தான் இவர்களும் கூறுகிறார்கள். ஆகவே. இங்கு போராட்டம் மக்களுக்கான அபிலாசைகளை வென்று கொடுப்பதற்காக மக்களை மீள எழுச்சிக்கு உட்படுத்தியிருக்கின்றது என்று கூறினாலும் அதற்கு அப்பால் இவர்கள் ராஜபக்ஷக்களின் நிகழ்ச்சி நிரலில் செயற்படுகின்றார்களா? என்ற கேள்வியொன்று இயல்பாக எழுகின்றது. அவர்களுடைய செயற்பாடுகளும் அவர்கள் தெரிவிக்கின்ற கருத்துக்களும் ராஜபக்ஷ தெரிவிக்கின்ற கருத்துக்களும் செயற்பாடுகளும் ஒரு புள்ளியில் சந்திப்பதால் எங்களுக்கு இந்த சந்தேகம் ஏற்படுகின்றது.



அதேநேரத்தில் இந்திய,இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதாக கஜேந்திரகுமார் கூறுகின்றார். 13 ஆவது திருத்தச் சட்டம் ஒற்றை ஆட்சிக்குள் இருப்பதாகவும், அதை நிராகரிப்பதாவும் அவர் கூறுகிறார்.

ஆனால் மாகாண சபை தேர்தலில் போட்டியிடப் போவதாக கூறுகின்றார். இது எத்தனை முரண்நகை. இந்திய – இலங்கை ஒப்பந்தத்தால் தான் 13ஆவது திருத்த சட்டம் உருவாக்கப்பட்டது.

13 ஆவது திருத்த சட்டத்தால் தான் மாகாணசபை உருவாக்கபட்டது. ஆகவே 13 ஆவது திருத்தம் உருவாக்கத்துக்குக் காரணமான விடயத்தையும் 13 ஆல் உருவாகிய விடயத்தையும் ஏற்றுக்கொள்ளும் ஒருவர் 13 ஐ நிராகரிப்பதாகச் சொல்வது ஒரு வேடிக்கையான கதை எனத் தெரிவித்துள்ளார்.

# பஸில் ராஜபக்ஷவின் திட்டத்துக்கு எதிராக அமைச்சர்கள் போர்க்கொடி

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிலிருந்து 25 வீத வரியை அறவிட நிதி அமைச்சு எடுத்துள்ள தீர்மானம் தொடர்பில் இன்று (திங்கட்கிழமை) நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

இதன்போது நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் இந்த முடிவுக்குக் கடும் எதிர்ப்பை வெளியிட அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, மஹிந்த அமரவீர, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் தீர்மானித்துள்ளனர்.

அத்துடன், தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமர வீர ஆகியோரும் எதிர்ப்பை வெளியிடவுள்ளனர். இதனால் அமைச்சரவையில் சூடான வாதப்பிரதிவாதங்கள் இன்று இடம்பெறக்கூடும் என சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# வடக்கில் பால் உற்பத்திகளை அதிகரிக்க விசேட நடவடிக்கை

## ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் பணியாளர்களின் பால் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக ஒரு கால்நடை அலுவலகத்துக்கு சுமார் 3.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையின் பால் உற்பத்தியில் வடக்கு மாகாணம் காத்திரமான இடத்தை வகிக்கின்ற நிலையில் அதனை மேலும் விருத்தி செய்யும் நோக்குடன் மத்திய அரசால் சுமார் 9 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள 34 கால்நடை வைத்திய அதிகாரி பணிமனைகளை உள்ளடக்கி இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

வடக்கில் சதோச விற்பனை நிலையத்தின் ஏற்பாடுகளை அதிகரிப்பதற்காகக் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

ஆகவே மாகாணம் முழுவதும் அத்தியாவசியப் பொருள்களை



சதோச விலையில் பெறக்கூடிய வகையில் விநியோகம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துங்கள் எதிர்வரும் மூன்று மாத காலத்தில் நெருக்கடி

குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம், குளிரூட்டி, மின் அழுத்தி உள்ளிட்ட அதிக மின்சாரம் செலவாகும் மின் இயந்திரங்களின் பாவனையை கட்டுப்படுத்திக் கொள்ளுமாறும், மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் எதிர்வரும் மூன்று மாத காலத்துக்குள் மின் துண்டிப்பை ஏற்படுத்த வேண்டிவரும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர் ஜனக்க ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

இலங்கை மின்சார சபை எதிர்வரும் மூன்று மாத காலத்துக்கும் மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி கேட்டுள்ளது. இதனால், மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தத் தவறும் பட்சத்தில் மின் விநியோகத்தைத் தடை செய்வதற்கான அவசியம் ஏற்படும்.

தற்போது உள்ள நிலையில், மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையான காலப்பகுதியில் மின்சாரத் தேவை அதிகமாகக் காணப்படுகிறது. இந்தக் காலப்பகுதியில் மின்சார பாவனையாளர்கள் மின்சாரத்தைக் குறைவாகப் பயன்படுத்திக் கொள்வது சிறந்தது.

குறிப்பாக குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம், குளிரூட்டி , மின் அழுத்தி (அயன் பொக்ஸ்) உள்ளிட்ட அதிக மின்சாரம் செலவாகும் மின் இயந்திரங்களின் பாவனையைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். மேலும், தேவைக்கு அதிகமாக மின் விளக்குகளைப் பயன்படுத்த வேண்டாம்.

இவ்வாறு மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தா விட்டால் எதிர்வரும் மூன்று மாத காலத்துக்கு மின் துண்டிப்பை ஏற்படுத்த வேண்டி வரும். – என்றார்.

# உயிரை பறிக்கும் ஆபத்தான வாழைப்பழம் கொழும்பில்!

## பொது மக்களுக்கு அவசர எச்சரிக்கை

புறக்கோட்டை மெனிங் சந்தையில் பச்சை வாழைப் பழங்களை 2 மணித்தியாலங்களில் பழுக்க வைத்து விற்பனை செய்யப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

மிகவும் ஆபத்தான இரசாயனங்களைப் பயன்படுத்தி பச்சை வாழைப்பழங்கள் மஞ்சள் நிறத்திற்கு மாற்றப்படுகின்றன எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புறக்கோட்டை மெனிங் சந்தையில் இடம்பெறும் இந்த சட்டவிரோத செயற்பாடு தொடர்பில் எந்தவொரு அதிகாரியும் இதுவரையிலும் அவதானம் செலுத்தவில்லை எனத் தெரியவந்துள்ளது.

முதலில் பச்சை நிறத்தில் காணப்படும் வாழைத்தார்களுக்கு மிகவும் ஆபத்தான இரசாயனத்தை தெளித்து அதனை தொங்க விடுவதாகவும் இரண்டு மணித்தியாலங்களில் வாழைக்காய் வாழைப்பழமாக மாறிவிடுவதாகவும் தெரியவந்துள்ளது.

ஊடகமொன்று வழங்கிய தகவலுக்கமைய அங்கு சென்ற அதிகாரிகள் இரசாயன போத்தல்கள் சிலவற்றை மீட்டுள்ளனர்.

இது பொது மக்களின் உயிரை பறிக்கும் செயல்களில் ஒன்று என உணவு தர நிலை பரிசோதிக்கும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் பல இடங்களில் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாக தகவல் கிடைத்துள்ளதாகவும் அது தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


மெனிங் சந்தையில் மொத்தமாகக் கொள்வனவு செய்யப்படும் வாழைப்பழங்கள் கொழும்பின் பல இடங்களில் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைத் தமிழர்கள் பலரை நாடு கடத்தவுள்ளது ஜேர்மன்!

போலி ஆவணங்களை சமர்ப்பித்து அரசியல் தஞ்சம் கோரியுள்ள இலங்கை தமிழர்கள் பலரை நாடு கடத்த ஜேர்மனி அதிகாரிகள் முடிவு செய்துள்ளது எனச் சிங்கள ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அவர்கள் பெப்ரவரி 15 ஆம் திகதி நாடு கடத்தப்படவுள்ளனர் என அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ஜேர்மன் அதிகாரிகள் 50 தமிழர்களை இலங்கைக்கு அனுப்பத் திட்டமிட்டனர், ஆனால் மனித உரிமை அமைப்புகளால் அந்த திட்டம் தடுத்து நிறுத்தப்பட்டதாக அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.




# நுட்பியல் அவத்தை

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)


அண்மையில் ஒரு உயர் கல்விக்கூடத்தில் கல்வியளாளர் ஒன்றுகூடி விவாதிப்பதற்கான மண்டபம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. அக்கட்டடம் சிறந்த தொழில்நுட்ப மேலாண்மையுடன் அதிநவீன கருவிகள் பொருத்தப்பட்டு அமைக்கப்பட்டிருந்தது. பலகோடி ரூபா செலவு செய்யப்பட்டு கல்வியாளர்களுக்கான பல வசதிகளை அது உள்ளடக்கி நிர்மானிக்கப்பட்டிருந்ததை பலரும் பாராட்டினார்கள். இருப்பினும் இங்கு உரையாற்றிய பேராசிரியர் ஒருவர் ஒரு கட்டடத்திற்கு பெருமைசேர்ப்பது எது? என்ற கேள்வியை எழுப்பினார். என்னடா இது தேடித்தேடி புதிய தொழில் நுட்பங்களை வரவழைத்து கட்டப்பட்ட கட்டடம் தான் பெருமையானது இதென்ன கேள்வி என்று புருவங்களை உயர்த்தினார்கள். எதன் மூலம் ஒரு கட்டடம் மேன்மை அடையும்? கேள்விகள் தொடர்ந்தன. பின்னர், அவரே அதற்கு பதலளித்தார், ‘ஓர் இடத்தின் மேன்மையை எடுத்துரைப்பன அங்கு வந்து செல்லும் மாமனிதர்கள், அங்கு நடைபெற்ற ஆரோக்கியமான கலந்துரையாடல்கள், நற்சிந்தனைகள், சிறந்த நிகழ்ச்சிகள் ,பயன் தரு வைபவங்கள், நன்நடத்தைகள், நேர்மறை அதிர்வுகள் என்பனவாகும். தனியே கட்டடங்களும் வசதிகளும் ஒருபோதும் மேன்மையினைத் தந்துவிட மாட்டாது. எனவே இது நல்ல அதிர்வுகளால் மென்மேலும் மெருகூட்டப்பட வேண்டும்’ என எடுத்துரைத்தார். இது எத்தகைய காத்திரமான சிந்தனை வெளிப்பாடு, இதன் உள்ளார்ந்த உண்மைகள் பலருக்குப் புரிவதில்லை. தொழில் நுட்பம் மாறுகிறது மாறிவரும் தொழில்நுட்பத்தை நாமும் நுகர வேண்டும் என்பதற்கு மேலாக நேர்மறை அதிர்வுகளை எங்கும் வியாபிக்கச் செய்ய வேண்டும்.

மேலே சொன்ன அந்த விடயத்துடன் தொடர்புடையதாக அண்மையில் நடைபெற்ற ஒரு தொழில் நுட்ப மாற்றத்தை பார்க்க முனைகிறேன். அதாவது இணைய உலாவியில் ஏற்பட்ட ஒரு மாற்றத்தினை இங்கு பார்க்கலாம்.

**கூகிள் நிறுவனம் எட்டு 8 ஆண்டுகளுக்குப் பிறகு தனது கூகிள் குரோம் உலாவியின் அடையாளத்தை (logo) கூகுள் மாற்றியிருக்கிறது.**

எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு குரோம் (chrome) புதிய லோகோவைப் பெறுகிறது, Chrome என்பது Google வழங்கும் பிரபலமான இணைய உலாவியாகும், இது உலகம் முழுவதும் மில்லியன் கணக்கான பயனர்களால் பயன்படுத்தப்படுகிறது

கூகுள் குரோம் தனது லோகோவை 2014 இற்குப் பிறகு முதல் முறையாக இப்போது தான் மாற்றுகிறது, ஆனால் மாற்றங்கள் மிகவும் நுட்பமானவை, இதில் வேறுபாட்டைக் கண்டறிவது இலகுவானது அல்ல. கூகுள் குரோம் வடிவமைப்பாளரான எல்வின் ஹூ (Elvin H) லோகோவின் மறுவடிவமைப்பின் முதல் தோற்றத்தைப் பகிர்ந்து கொண்டிருக்கிறார். மேலும் நுட்பமான மாற்றங்களைச் செய்வதற்குப் பின்னால் உள்ள சிந்தனையையும் விளக்கியுள்ளார். அதாவது,




‘8 ஆண்டுகளில் முதல் முறையாக Chrome இன் பிராண்ட் ஐகான்களைப் புதுப்பிக்கிறோம். புதிய ஐகான்கள் உங்கள் சாதனங்கள் முழுவதும் விரைவில் தோன்றத் தொடங்கும்’ என்று ஹூ கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், ‘கூகுளின் நவீன பிராண்ட் வெளிப்பாட்டுடன் இணைவதற்கு, நிழல்களை அகற்றி, விகிதாசாரத்தை செம்மைப் படுத்தி, வண்ணங்களை பிரகாசமாக்குவதன் மூலம் முக்கிய பிராண்ட் ஐகானை எளிதாக்கியுள்ளோம்’ என்றார். மேலும், அவர்கள் பச்சை மற்றும் சிவப்பு நிறங்களின் சில நிழல்களை ஒன்றன் பின் ஒன்றாக வைக்கும்போது, அது ‘ஒரு விரும்பத்தகாத வண்ண அதிர்வுகளை உருவாக்கியது’ என்றும் அவர் வலியுறுத்தினார். எனவே, இதைச் சரிசெய்ய, ஐகானை ‘அதிக அணுகக்கூடியதாக’ மாற்றவும், வண்ண அதிர்வுகளைத் தடுக்கவும் புதிய லோகோவிற்கு குழு மிகவும் நுட்பமான சாய்வுகளைப் பயன்படுத்தியது என்று குறிப்பிடுகிறார்.

அவர் குறிப்பிட்டது போன்று, Chrome நுட்பமான வடிவமைப்பு மாற்றங்களைப் பெறுவது இது முதல் முறை அல்ல. இதுவும் 2014ல் நடந்தது. பளபளப்பான, முப்பரிமாண சின்னத்தில் இருந்து இருபரிமான (2D) சின்னமாக, கூகிளின் வடிவமைப்புக் குழு 2011 இல் Chrome இன் லோகோவை முழுவதுமாக மாற்றியது, ஆனால், இது இதுவரை இல்லாத மிகப்பெரிய வடிவமைப்பு மாற்றமாகும்.

Chrome தோன்றும் வெவ்வேறு இயங்கு தளங்களின் அடிப்படையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என ஹூ கூறினார். ‘ChromeOS இல், மீதமுள்ள சிஸ்டம் ஐகான்களின் தோற்றத்துடன் பொருந்த, சாய்வுகள் இல்லாமல் பிரகாசமான வண்ணங்களைப் பயன்படுத்துகின்றன.’என்று அவர் கூறினார்.

**ஏன் Google Chrome லோகோவை மாற்றினார்கள்?**

கூகுளின் நவீன பிராண்ட் வெளிப்பாட்டுடன் இணைவதற்கு, நிழல்களின் நேர்மறைத் தாக்கத்தைத் தவிர்ப்பதற்கு அதனை அகற்றி, விகிதாசார சமமின்மையை செம்மைப்படுத்துவதற்கும், வண்ணங்களின் பிரகாசமின்மையை பிரகாசமாக்குவதன் மூலம் முக்கிய பிராண்ட் ஐகானை எளிதாக்குவதற்குமாக இது மாற்றப்பட்டுள்ளது. மேலும்எல்லா ஓ.எஸ். பாவனையில் ஏற்பட்ட மாற்றத்தை தவிர்க்க தற்போது அறிமுகப்படுத்திய மற்றொரு மாற்றம் Windows. Mac மற்றும் iOS சாதனங்களுக்கான தனிப்பயனாக்கங்கள் ஆகும்.

புதிய லோகோ பழைய லோகோவுடன் ஒப்பிடுகையில் பெரிய நீல வட்டம் மற்றும் நேர்த்தியான வடிவமைப்பைக் கொண்டுள்ளது. லோகோவின் வண்ணங்கள் இப்போது மிகவும் துடிப்பானவை, அது உயிரோட்டமாகத் தோற்றமளிக்கிறது. புதியது ஒவ்வொரு வண்ணத்திலும் எல்லைகளில் நிழல்களைக் கொண்டிருக்கவில்லை, எனவே மூன்று வண்ணங்களும் தட்டையாகத் தெரிகின்றன.

ஆனால் லோகோ ஒரு புரட்சிகர மறுவடிவமைப்பாக இருக்கும் என்று ஹூ கூறவில்லை என்றாலும், இணையம் முந்தைய வடிவமைப்பில் உள்ள அதன் ஒற்றுமையில் மிகுந்த மகிழ்ச்சியைக் காண்கிறது என அவர் பதில் கூறுகிறார். இதில் நாம் கவனிக்க வேண்டியது எந்த ஒரு விடயத்தினையும் மாற்றும் போதோ அல்லது சீரமைக்கும் போதோ அதனை வெறும் கட்டடமாகவோ சடப் பொருளாகவோ பார்க்காது அதனுள் இருக்கும் உணர்விற்கும் உயிரிற்கும் அதன் அதிர்வுக்கும் நாம் முக்கியம் கொடுக்க வேண்டும் என்பதாகும். இந்த மெய்மை தற்போது கொண்டாடப்படும் காதலர் தினத்திற்கும் பொருந்தும். எதனையும் ஆத்மார்த்த உணர்வுடன் கொண்டாட வழியமைக்கும்.

காலைக்கதிர் Kalaikkathir

# கைதிகள் விடயத்தில் ஜெனிவா செல்வாக்குச் செலுத்த முடியாது!

## அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூறுகின்றார்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸில் அல்லது ஏனைய சர்வதேச சக்திகள் கைதிகள் தொடர்பான தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் இடமளிக்காது என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பலாங்கொடையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், நாட்டில் கைதிகளை விடுவிக்கும் போது ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிக்கு பிரச்சினை ஏற்படாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர் –

“ஜனாதிபதி தனது கொள்கை விளக்க அறிக்கையில் கைதிகளுக்கு புனர்வாழ்வு வழங்குவார் என உறுதியளித்துள்ளார்.

சிறைச்சாலைகளில் நெரிசலைக் குறைக்கவும், விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள நீண்டகாலக் கைதிகளை விடுவிக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

கைதிகளை சுதந்திரமாக அவதானித்து ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவார் என்றார்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந் தமையிட்டு பல நாடுகள் சிறிலங்காவை எதிர்க்கின்றன எனவும், அவர்கள் அரசுக்கு எதிராக எப்போதும் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர் எனவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

# ஐ.தே.கவை மீளக் கட்டியெழுப்ப ரணில் பகீரதப் பிரயத்தனமாம்!

ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் கட்டியெழுப்புவதற்காகக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க கடும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார் என சிறிகொத்தாவின் தகவல்கள் கூறுகின்றன.

இதற்காக ரணில் விக்கிரமசிங்க கடந்த 8 ஆம் மற்றும் 9 ஆம் திகதிகளில் சிறிகொத்தாவில் பல கூட்டங்களை நடத்தியுள்ளாரெனவும் தெரியவருகிறது.

கட்சியின் இணை அமைப்புகளான இளைஞர் முன்னணி, லக் வனிதா முன்னணி உட்பட கட்சியின் அமைப்புகளை செயற்பட வைத்து, கட்சியை வலுப்படுத்தும் வேலைத் திட்டத்தை முன்னெடுப்பது குறித்து இந்த கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து தேர்தல் தொகுதிகளுக்கும் 150 உறுப்பினர்களைகொண்டதாக இளைஞர் முன்னணியை உரு வாக்கவும் அதற்காக இளைஞர், யுவதிகளை இணைத்துக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை தவிர கடந்த 7ஆம் திகதி முதல் ஒரு வார காலத்தில் தொகுதி அமைப்பாளர்களுக்கு வெற்றிடம் நிலவும் இடங்களுக்கு கிடைத்துள்ள விண்ணப்பங்கள் ஆராயப்பட்டன. அவற்றைப் பரிந்துரைக்கும் நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளன.

கடந்த வாரம் நடைபெற்ற இந்த கூட்டங்களில் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார உள்ளிட்டோர் கலந்துக்கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் உப தலைவர் ரவி கருணாநாயக்க, முன்னாள் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க ஆகியோர் இந்த கூட்டங்களில் கலந்துக்கொள்ளவில்லை.

இவர்கள் கட்சியின் தலைவருடன் கொள்கை ரீதியான முரண்பாட்டு மோதலில் இருந்து வருகின்றனர் எனக் கூறப்பட்டது.

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான பிரதான விசாரணை அதிகாரி தப்பி ஓட்டம்!

## சொல்லிக் கொள்ளாமல் அமெரிக்கா பறந்தார்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் பிரதான விசாரணை அதிகாரி ஒருவர் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் உதவி பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்ற இந்த அதிகாரி அமெரிக்காவிற்கு தப்பிச் சென்றுள்ளார் என உளவுத்துறை வட்டாரங்கள் தேசிய பாதுகாப்பு சபையில் தெரிவித்துள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது பெயரிடப்பட்ட சாரா ஜஸ்மின் என்ற புலஸ்தினி மகேந்திரன் மன்னாரில் இருந்து படகில் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றார் என ஈஸ்டர் ஞாயிறு விசாரணை ஆணைக் குழுவுக்கு அறி வித்தவர் இந்த அதிகாரிதான்.

சாய்ந்தமருது குண்டுவெடிப்பில் இருந்து சாரா தப்பிச் சென்றமையை தனது உளவா ளிகள் இருவர் நேரில் பார்த்தனர் எனக் கூறி உளவுத் துறையினரின் சாட்சியத்தை அந்த அதிகாரி ஆணைக்குழுவில் முன் வைத்தார்.

இந்த அதிகாரிதான் சாரா ஜாஸ்மின் பொலிஸ் இன்ஸ்பெக்டரால் அழைத்துச் செல்லப்பட்டார் எனத் தெரிவித்தார். இதன் படி, பொலிஸ் இன்ஸ்பெக்டர் அபுபக்கரை அந்த அதிகாரி கைது செய்தார்.

இரண்டு ஆண்டுகளாகத் தடுப்புக் காவலில் இருந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் அபுபக்கர், அவருக்கு எதிராக பொய் சாட் சியம் அளிக்கப்பட்டமையால் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றமை தற்போது தெரியவந்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு விசாரணை ஆணைக்குழுவின் நேரில் கண்ட சாட்சிக ளின் கூற்றுப்படி, சம்பவம் நடந்த போது இரண்டு உளவாளிகளும் பல மாதங்களாக வவுனியா மற்றும் கிழக்கு மாகாணத்திற்கு வெளியே இருந்துள்ளனர். பின் னர் இரு உளவாளிகளின் விசார ணையின் போது உயிர்த்த ஞாயிறு விசாரணை அதிகாரியின் வேண்டுகோளின் பேரில் பொய்யான சாட்சியங்களை வழங்கினோம் என அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

இதன்படி, உயிர்த்த ஞாயிறு விசாரணை ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைய பொலிஸ் பரிசோதகர் அபுபக்கர் வீண் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்குமாறு பொலிஸ் திணைக்களம் சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கிடையில், உயிரித்த ஞாயிறு விசாரணை ஆணைக்குழுவின் பொலிஸ் அதிகாரி திணைக்களத்திற்கு அறிவிக்கா மல் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

# சர்வதேசத்திடம் நீதி வேண்டுவது காட்டிக் கொடுக்கும் செயலல்ல!

## அருட் தந்தை சிறில் காமினி அடிகளார் கூறுகின்றார்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேசத்தின் ஆதரவைப் பெறுவதானது, நாட்டைக் காட்டிக் கொடுக்கும் முயற்சி அல்ல. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்காகவே சர்வதேசத்தின் ஆதரவை பெறுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறோம். எமது இந்த போராட்டத்திற்கு கத்தோலிக்க திருச் சபையின் தலைவரான பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் ஆண்டகையும் தனது பூரண ஆதரவை வழங்கவுள்ளார் என கொழும்பு மறை மாவட்ட அருட் தந்தை சிறில் காமினி அடிகளார் தெரிவித்தார்.



இலங்கை கத்தோலிக்க திருச்சபை எதிர்க்கட்சிகளின் அரசியல் நிகழ்ச்சி நிரலின்படி செயற்படுவதாகக் கூறப்படுவதை முழுமையாக மறுப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

கொழும்பு மறை மாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்து பரிசுத்த பாப்பரசருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

இதற்குப் பதில் கடிதம் அனுப்பியிருந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் ஆண்டகை இவ்விடயம் தொடர்பில் தாம் முழுமையான ஆதரவை வழங்குவார் என அக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார் என்று அருட் தந்தை சிறில் காமினி குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று மூன்று ஆண்டுகள் ஆகப்போகின்றன. இருப்பினும் இதுவரை சூத்திரதாரி யார் எனக் கண்டறியப்படவில்லை. இது தொடர்பில் மேற் கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் குறித்து கத்தோலிக்க திருச்சபை அதிருப்தியில் உள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை கத்தோலிக்க திருச்சபை விரும்புகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் மாபெரும் சூழ்ச்சி நடைபெற்றுள்ளதாக அப்போதைய சட்ட மா அதிபர் தப்புள டி லிவேரா தெரிவித்திருந்தார். தப்புள டி லிவேரா வெளியிட்ட இந்த கருத்து தொடர்பில் குற்றவியல் விசாரணை திணைக்களம் அவரிடம் விசாரணை நடத்த வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவத்துக்கு அரசாங்கம் நீதியை பெற்றுக் கொடுப்பதற்கு தவறினால், சர்வதேச நீதிமன்றத்தை நாடுவதற்கு இலங்கை கத்தோலிக்க திருச்சபை தயாராகவே உள்ளது. எமது இந்த நீதிக்கான போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இலங்கை கத்தோலிக்க திருச்சபைக்கு பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் ஆண்டகை தனது பூரண ஆதரவை வழங்குதாக கூறியிருந்தார்.

மேலும், இவ்விடயம் குறித்து சர்வதேச சமூகத்துக்கும் வெளிநாட்டில் வாழும் இலங்கை கத்தோலிக்கர்களுக்கும் விளக்கமளிப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சர்வேதசத்தின் ஆதரவைப் பெறுவ தென்பது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் முயற்சியாக கருதாமல், பாதிக்கப்பட்ட மக் களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கருதுங்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். குற்றம் செய்தவர் களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். யார் ஆட்சியில் இருந்தாலும், நீதிக்காக தொடர்ந்து போராடுவோம் என்றார்.

# அரிய வெள்ளை நிறக் கழுகை வளர்த்த புத்தளம்வாசி கைது!

புத்தளம் பாலாவி 2 ஆம் கட்டைப் பகுதியில் சட்ட விரோதமாக வளர்க்கப்பட்ட அரிய வகை வெள்ளை நிற கழுகுடன் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்குக் கிடைக்க பெற்ற இரகசியத் தகவலுக்கமைய நேற்று காலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது அரிய வகை வெள்ளை நிற கழுகு (WHITE BELLIED SEA EAGLE - HALIEETUS LEUCOGWTER) இனத்தைச் சார்ந்தது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த அரிய வகை வெள்ளை நிறக் கழுகு விற்பனை செய்யப்படுவதற்காக வளர்க்கப்பட்டு வந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் புத்தளம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக நீதிமன்ற உத்தரவின் பேரில் புத்தளம் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட உள்ளார்.

மேலும் அரிய வகை வெள்ளை நிற கழுகும் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய புத்தளம் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

## மற்றொரு காட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறிப்பிடுகின்றன.

இவ்வாறானதொரு நிலையில் ஜெனிவாவில் ஏற்படக் கூடிய நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு அரசு பல்வேறு வியூகங்களை வகுத்து வருகின்றது.

இதனடிப்படையில் ஜெனிவா அமர்வுக்கு முன்னர் முக்கிய சில ஐரோப்பிய நாடுகளுடன் கலந்துரையாடலை முன்னெடுக்க வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தீர்மானித்துள்ளார். இந்தக் கலந்துரையாடல்களுக்குச் சில நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன என வெளிவிவகார அமைச்சின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார்.

அண்மைய இந்திய விஜயத்தைப் போன்று குறிப்பிட்ட சில ஐரோப்பிய நாடுகளுக்கு ஜெனிவா அமர்வுக்கு முன்னர் விஜயம் செய்தல் அல்லது மார்ச் மாதம் 3 ஆம் திகதி இலங்கை குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் குறித்த நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளல் போன்ற வழிமுறைகள் குறித்து இலங்கையின் இராஜதந்திர பணிக் குழாம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

அதேசமயம் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் சபையின் 49 ஆவது கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக ஜெனிவா செல்லவுள்ளார்.

மார்ச் 3ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை குறித்த எழுத்து மூலமான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த அறிக்கையானது இலங்கைக்குச் சவால் மிக்கதாகவே அமையும் எனவும் கருதப்படுகின்றது.

# நாடு படிப்படியாக மீட்சியடைகின்றது!

## ஜனாதிபதி வெளியிட்ட தகவல்

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் சவால்களின் தன்மை அல்லது அளவு முக்கியமில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 தொற்றைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில் நாட்டில் அபிவிருத்திப் பணிகள் தொடர்கின்றன எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஏறக்குறைய இரண்டு வருடங்களாக வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்து வருவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப் படுத்தும் நிபுணர்களுடனான கலந்துரையாடல் தொடரின் முதல் சுற்று கலந்துரையாடலில் கலந்துகொண்டு ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி விரும்பிய இலக்குகளை அடைவதற்குத் தேவையான பலத்தை அளித்து தேசிய வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு மேலும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக கலந்துரையாடலில் கலந்துகொண்ட நிபுணர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் வேலைத்திட்டம் தொடர்பாகப் பெரும்பான்மையான மக்கள் சாதகமாக உள்ளனர். குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரல்களை அடையும் நோக்கத்துடன் சில பிரிவினர் பரப்பும் குற்றச்சாட்டுகளை வல்லுநர்கள் கடுமையாக நிராகரித்தனர்.

முழு உலகமும் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள வேளையில்



இலங்கை திட்டமிட்டு முன்னேறி வருவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனாதிபதியால் தொடங்கப்பட்ட விவசாயத்துக்கான புதிய அணுகுமுறைக்கு இந்த துறைகளில் முழுநேரமாக ஈடுபட்டுள்ள ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில்முனைவோர் தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதாக அத்துறை வல்லுநர்கள் தெரிவித்தனர்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை நிபுணர்கள் எடுத்துரைத்ததோடு, இது தொடர்பாக தற்போதுள்ள தடைகளை நீக்குவதற்கு நிபந்தனையின்றி அரசுக்கு ஆதரவளிப்பதாக வலியுறுத்தினர்.

கல்வி, கொள்கை, சமூகவியல், விவசாயம், ஆராய்ச்சி, நீர் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மருத்துவம், பொறியியல் மற்றும் புத்தாக்கம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியுடன் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மத்திய வங்கியின் ஆளுநர், ஜனாதிபதியின் செயலாளர், ஜனாதிபதியின் பிரதான ஆலோசகர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# பிரபலமான வைத்தியசாலையில் கொழும்பில் போலி மருத்துவர்!

போலியான தொழில் தகுதிகளை முன்வைத்து, கொழும்பு றிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் பிரதான நிர்வாக பதவியை வகித்து வரும் மருத்துவர் தொடர்பில் இலங்கை மருத்துவச் சபைக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

சிறுவர் நோய் தொடர்பான சிறப்பு நிபுணர் எனக் காட்டி அந்த மருத்துவர் நிர்வாக பதவியை வகித்து வருகிறார் என முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

போலியாகத் தன்னை சிறப்பு மருத்துவர் நிபுணர் எனக் காட்டுவது மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் தண்டனை பெறக்கூடிய குற்றம்.

இந்த மருத்துவர் கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் தன்னை சிறப்பு மருத்துவ நிபுணர் எனக் கூறி ஊடகங்களில் தோன்றி வருகிறார் எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரண மருத்துவர் ஒருவர் தன்னை சிறப்பு மருத்துவ நிபுணர் என காட்டிக்கொள்வது மக்கள் மத்தியில் தவறான புரிதலை ஏற்படுத்தும் எனவும் அதில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# தேசிய மட்ட பளுதூக்கும் போட்டிகளில் வெற்றிபெற்ற வவுனியா வீராங்கனைகள்

வவுனியாவை சேர்ந்த மூன்று யுவதிகள், இளையோர்/கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட புதியவர்களுக்கான பளு தூக்கும் போட்டியில் தேசிய மட்ட ரீதியில் வெற்றிபெற்று வவுனியா மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

கா/போத்திவல மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) இல் நடைபெற்ற இளையோர்/ கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட புதியவர்களுக்கான பளு தூக்கல் போட்டி இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் 44 கிலோ எடை பிரிவில் 85 கிலோ எடை தூக்கி பானுஜா சுரேஸ்குமார் 2 ஆம் இடத்தையும், 56 கிலோ எடை பிரிவில் 71 கிலோ எடை தூக்கி விதுசியா சுரேஸ்குமார், 2 ஆம் இடத்தையும், 76 கிலோ எடை பிரிவில் 94 கிலோ எடை தூக்கி செரோண்யா பாலசுப்ரமணியம், 2 ஆம் இடத்தையும் பெற்று வவுனியா பளு தூக்கல் கழகத்தின் பயிற்றுவிப்பாளர் ஞா.ஜீவனுக்கும் வவுனியா



மண்ணிற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

இவ்வாறு தற்காலத்தில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த பெண்கள் அதிகம் பளு தூக்கும் போட்டிகளில் வெற்றிபெற்று தொடர்ந்து சாதனை நிகழ்த்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுக்கு நடுநிலையான விசாரணை வேண்டும்

## மட்டு. இலங்கை ஆசிரியர் சங்க செயலர் பொ.உதயரூபன் கோரிக்கை

பட்டிருப்பில் இணைந்த கணிதம் பரீட்சையின் போது குழறுபடி ஏற்பட்டது. மாணவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுக்கு நீதியான, பக்கச்சார்பற்ற நடுநிலையான விசாரணையை முன்னெடுக்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் பொ.உதயரூபன் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தின் ஐந்து கல்வி வலயங்களிலும் ஒரு சிரேஷ்ட தரத்தில் இருக்கின்ற கல்விப் பணிப்பாளர்கள் இருக்கும் போது கனிஷ்ட தரத்தில் இருக்கின்ற கல்விப் பணிப்பாளரிடம் பரீட்சை மேற் பார்வையாளர்களை நியமிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது எனவும் கூறியுள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள மட்டு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

அண்மையில் பட்டிருப்பு கல்வி வலயத்தில் இணைந்த கணிதம் உயர்தரப் பரீட்சையின் போது இடம்பெற்ற குழறுபடி தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் அன்றையதினம் பிரதி பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அச்சமயம் அப்பரீட்சையில் கடமையாற்றியவர்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கின்றனர் என நிலைமையை எமது பொதுச் செயலாளரிடம் விளக்கியிருந்தார்.

இருந்தும் இந்தப் பரீட்சை தொடர்பில் மாணவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுக்கு நீதியான, பக்கச்சார்பற்ற நடுநிலையான விசாரணையை இலங்கை ஆசிரியர் சங்கம் மீண்டும் வலியுறுத்துகின்றது.

அண்மைக்காலமாகப் பட்டிருப்பு கல்வி வலயத்தினுடைய கல்வி வளர்ச்சி ஒரு துரிதமான நிலையில் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கடந்த முறை இடம்பெற்ற உயர்தரப் பரீட்சையில் மாவட்ட ரீதியில் மருந்துவத்துறையில் பட்டிருப்பு மகா வித்தியாலய மாணவன் தெரிவு செய்யப்பட்டிருப்பதோடு அதேவேளை கல்லாறில் 26 ஆவது நிலையில் பொறியியல் பீடத்திற்கு மாணவியொருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

மேலும் 52 மாணவர்கள் இணைந்த கணிதம் பாடத்துக்குத் தோற்றிய போது அதில் 50 வீதமான மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்திருந்தார்கள். மற்றும் ஏனைய பாடங்கள் தொடர்பிலும் பட்டிருப்பின் கல்வி வளர்ச்சி மிக உயர்வாகக் காணப்பட்டதோடு 50 வீதமான மாணவர்கள் சகல துறைகளிலும் பல்கலைக் கழக அனுமதியைப் பெற்று வலயத்திற்குப் பெருமையைச் சேர்த்திருக்கின்றார்கள்.

அத்துடன் கடந்த உயர்தரத்தில் வர்த்தகத்துறையில் மாவட்டத்தின் ஐந்து வலயங்களிலும் முதலாவது இடத்தை பட்டிருப்பு வலயம் பெற்றிருக்கின்றது. இவ்வாறு இருக்கையில் மேற்குறிப்பிட்ட சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

அதற்குப் பரீட்சை மேற்பார்வையாளர்களைத் தற்காலிகமாக இடைநிறுத்தியிருக்கின்றபோதும், இந்த மேற்பார்வையாளர்களை யார் நியமித்தார்கள் என்பது தொடர்பிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இதற்குப் பரீட்சைகள் ஆணையாளர் பொறுப்புக் கூற வேண்டும்.

ஏனெனில் மட்டக்களப்பு கல்வி வலயத்திலிருந்து பெரும்பாலான அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இந்த வருடம் கடமைப் பொறுப்புகள் கையளிக்கப்படவில்லை. பரீட்சை தொடர்பில் நீண்ட காலம் அனுபவத்துடன் மேற்பார்வையாளர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு புதிதாக நியமனங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும். மாவட்டத்தின் ஐந்து கல்வி வலயங்களிலும் ஒரு சிரேஷ்ட தரத்தில் இருக்கின்ற கல்விப் பணிப்பாளர்கள் இருக்கும்



போது கனிஷ்ட தரத்தில் இருக்கின்ற கல்விப் பணிப்பாளரிடம் பரீட்சை மேற்பார்வையாளர்களை நியமிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

அதேநேரம் பரீட்சை மேற்பார்வை கடமைகளில் முழு நேரமாக ஈடுபட வேண்டியவர்கள் பரீட்சை பகுப்பாய்வு என்று சொல்லி மட்டக்களப்பு கல்வி வலயத்தில் நடத்துகின்றார்கள். இது தொடர்பில் நேரடியாக மாகாணக் கல்விப் பணிப்பாளரிடமும், பிரதிப் பரீட்சை ஆணையாளரிடமும் தெரிவித்திருந்தோம்.

அவர் முழு நேரமும் பரீட்சைக் கடமையில் ஈடுபட வேண்டியவர் சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்யும் கடமையில் எவ்வாறு ஈடுபட முடியும். இவ்வாறான விடயங்கள் தொடர்பில் நீதியான விசாரணை மேற்கொள்வது மட்டுமல்லாமல் இந்த மாணவர்களுக்குப் பொருத்தமான நடவடிக்கையை பரீட்சைகள் திணைக்களம் மேற்கொள்ள வேண்டும்.

இது தொடர்பில் நாங்கள் பரீட்சைகள் பிரதி ஆணையாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்விச் செயலாளர் ஆகியோரிடம் தெரிவித்திருக்கின்றோம் மேலும் மாகாண ஆளுநருடனும் கலந்துரையாடவுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.02.2022 இல் வெளியிடப்பெற்றது.